ISSN 1391-9504

Rs.25.00




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேனீக்களை வசீகரித்து தேன் சேகரிக்கும் ஆதிவாசிகள்







மகுடியால் பாம்பை வசீகரிப்பது போல் விசித்திர விசில் ஒலியால் தேனீக்களை வசீகரித்து தேன் சேகரிக்கிறார்கள் என்றால் நம்ப முடிகிறதா? 'பிக்மிஸ்' என்னும் ஆதிவாசி இனத்தவர்கள்தான் இப்படித் தேன் சேகரிக்கின்றனர்.

பிக்மிஸ் இனத்தைச் சேர்ந்த ஆண்கள் தேன் சேகரிக்கும் காலத்தில் காடுகளில் உள்ள தேன் கூடுகளை நாடிச் செல்கின்றனர். இவ்வாறு செல்கையில் இவர்கள் தம்முடன் ஒருவகை விசில்களையும் எடுத்துச் செல்கின்றனர். தேன்கூடுகளுக்கு அருகில் போய் இவர்கள் அந்த விசிலை ஊதும்போது அதிலிருந்து வெளிப்படும் விநோதமான ஒலி தேனீக்களை வசீகரிக்கச் செய்கின்றது. அவ்வேளையில், இவர்கள் மரங்களில் ஏறி தேனீக்களை ஏமாற்றி அவற்றிடமிருந்து எவ்வித பாதிப்பும் அடையாமல் தேன்கூடுகளில் இருந்து தேனைச் சேகரிக்கின்றனர்.

இந்த பிக்மிஸ் இனமக்கள்தான் உலகிலுள்ள மனித இனங்களில் அளவில் மிகவும் சிறிய இனத்தவர்கள் என்று தெரிகிறது. இந்த இனத்தைச் சேர்ந்த ஆண்கள் சுமார் 4 அடி உயரம் வரையிலேயே வளர்கின்றனர். பெண்கள், ஆண்களிலும் பார்க்க இரண்டு அங்குலம் குறைவாக வளர்ச்சியடைகின்றனர். இவர்களின் இந்தக் குறுகிய உருவமானது இவர்கள் அடர்ந்த காடுகளில் நுழைவதற்கும் மரங்களில் இலகுவாக ஏறுவதற்கும் வசதியாக அமைந்துள்ளன. இவர்களின் தோல் செவ்வண்ணமாகவும் தலைமயிர் பழுப்பு நிறத்தில் சுருளாகவும் அமைந்துள்ளன. அநேகருக்கு தலை வட்ட வடிவமாகவும் மூக்கு தட்டையாகவும் கைகள் நீண்டும் கால்கள் கட்டையாகவும் இருக்கும்.

சில விஞ்ஞானிகள் இவர்கள் ஆபிரிக்க இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று கருதினாலும் மேலும் சிலர் இவர்கள் ஒரு தனியான இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று கருதுகின்றனர். பிக்மிஸ் இனத்தவர்கள் காடுகளில் வேட்டையாடி இறைச்சி வகைகளை தமது இருப்பிடங்களுக்குக் கொண்டு வருவர்.

விலங்குகளை வேட்டையாடுவதற்காக இவர்கள் வலை, ஈட்டி, விஷம் தடவப்பட்ட சிறிய அம்புகள் என்பனவற்றைப் பயன்படுத்துகின்றனர். பெண்கள் மலர்கள், மரக்கறி வகைகள், காளான்கள், விதைகள் என்பனவற்றை சேகரிக்கின்றனர். மரங்களாலும் இலைகுழைகளாலும் இவர்கள் தமது இருப்பிடங்களை அமைத்துக் கொள்கின்றனர்.

ஒரு காலத்தில் மத்திய ஆபிரிக்காவில் வாழ்ந்த இம்மக்கள் தற்போது கெமரூன், கொங்கோ, ருவாண்டா காடுகளில் வசித்து வருகின்றனர்.

-ராஜா

## A யிலிருந்து Z வரை மலர்கள்

(தொடர்ச்சி...)

M



Moon beam
இரட்டை நந்தியாவட்டை



Marjoram
மரிக்கொழுந்து



May flower
வைகாசிப் பூ



May Orchid
மயிர்க்கொன்றை



Milling tonia
மரவள்ளி மலர்

N



Night queen
முல்லைமலர்



Naflower
நாகமலர்

O



Orchid
ஓர்கிட்



Oleander
அரலிப் பூ

(மிகுதி அடுத்த இதழில்)

தொகுப்பு: ச.ஷியாம்தேவ், மந்தண்டாவளை, மாத்தளை.

# கைகூப்பும் உயிரினம் வெட்டுக்கிளி

கும்பிடும் வெட்டுக்கிளி (Praying Mantis) என்று கூறப்படும் உயிரினம் உணவுக்காகக் காத்திருக்கும் வேளையில் முன்னங்கைகள் இரண்டையும் கூப்பி கும்பிடுவதுபோல் காட்சியளிக்கும். யாராவது அருகில் செல்லும் போதும் அது இவ்வாறு செய்வதால் கைகூப்பி வணங்குவதாகவே பலரும் நம்புகின்றனர். இந்த வெட்டுக்கிளிகள் நமது வீட்டுத் தோட்டங்களில் இருப்பது மிகவும் பயனுள்ளதாகும். இவை ஈக்கள், கம்பளிப் பூச்சிகள், பூச்சி இனங்கள், கரப்பான் பூச்சிகள் போன்ற பயிர்களை அழிக்கும் மற்றும் நோய்களை ஏற்படுத்தும் உயிரினங்களை தின்று விடுவதால் அவற்றால் ஏற்படும் பாதிப்புக்கள் தடுக்கப்படுகின்றன. எனினும், தேனீ வளர்ப்புக்கு இவை இடைஞ்சலாக உள்ளன. எப்படியெனில் தேன் கூட்டின் வாயிலில் இவை அமர்ந்து கொண்டு வெளியில் வரும் உட்புகும் தேனீக்களை விழுங்கி ஏப்பம் விட்டு விடுகின்றன. கைகூப்பும் இனத்தைச் சேர்ந்த இந்த வெட்டுக்கிளிகளால் மனிதருக்கு எந்தவித கெடுதியும் இல்லை.





முழுமையாக வளர்ச்சியடைந்த இந்த இன வெட்டுக்கிளிகள் 10 சென்றிமீற்றர் அளவில் இருக்கின்றன. கூர்மையான பார்வையுடைய இந்த வெட்டுக்கிளிகள் தமது இரையை பூனை போன்று தாவிப்பிடிக்கும் திறமையுள்ளவை. தலையை திருப்பக்கூடிய மிகச்சில உயிரினங்களில் இந்த வெட்டுக்கிளியும் ஒன்று.

உணவுக்குப் பின்னர் இவை தமது முன்னங்கால்களை சுத்தம் செய்து கொள்வதையும் காணலாம். வெட்டுக்கிளிகளை செல்லப் பிராணிகளாக வளர்த்தும் வருகின்றனர்.

-சீலன்



## 'விஜய்'யின் பிறந்தநாளில் வாழ்த்தி மகிழ்ந்திடுவோம்!

எதிர்வரும் 15 ஆம் திகதி உங்கள் அறிவுப் பயணத்தின் தோழன் 'விஜய்' தனது 6 ஆம் வருடத்தில் காலடி வைக்கவுள்ளான். விஜய்யின் வெற்றிப் பயணத்தின் பங்காளர்கள் நீங்களே. எனவே, எதிர்வரும் 11 ஆம் திகதி வெளிவரவுள்ள இதழ், விஜய்யின் பிறந்தநாள் இதழாக அமையவுள்ளது. அந்த இதழில் 'விஜய்'க்கான உங்கள் வாழ்த்துக்களை பிரசுரிக்க எண்ணியுள்ளோம். எனவே, 02.03.2009 இற்கு முன்னர் உங்கள் வாழ்த்துக்களை

'விஜய்' பிறந்தநாள் வாழ்த்து,
த.பெ.எண்-2037,
கொழும்பு

என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கையெழுத்துப்பிரதிப் படைப்புகள் ஏப்ரல் வரை ஏற்றுக்கொள்ளப்படும்



கலாசார விவகாரத் திணைக்களத்தினால் பாடசாலை மாணவர்களுக்கு நடாத்தப்படவுள்ள கையெழுத்து பிரதிப் போட்டிக்கான படைப்புகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் தரம் 10 தொடக்கம் தரம் 13 வரை கல்வி கற்கும் மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்.

இப்போட்டிக்காக நாவல், சிறுகதை, நாடகப் பிரதி, சித்திரக்கதை போன்ற துறைகளுக்கான படைப்புகளை அனுப்பி வைக்கலாம். விண்ணப்பதாரிகள் ஒரு துறையிலோ அல்லது பல துறைகளிலோ பங்குபற்றலாம். எனினும், ஒரு துறையில் கையெழுத்துப் பிரதியிலான ஓர் ஆக்கத்தை மாத்திரமே அனுப்பி வைக்கலாம்.

விண்ணப்பதாரியின் பெயர், பிறந்த திகதி, பாடசாலை பெயர், கற்கும் தரம், சுயமுகவரி, தொலைபேசி இலக்கம், பங்குபற்றும் துறை, கையெழுத்துப் பிரதியிலான ஆக்கத்தின் பெயர் என்பனவற்றை உள்ளடக்கிய விண்ணப்பத்துடன், பாடசாலை அதிபரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு, உத்தியோகபூர்வ முத்திரை இடப்பட்டு ஆக்கங்கள் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

சகல ஆக்கங்களும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதிக்கு முன்னர் 'மாணவர் கையெழுத்துப் பிரதிப் போட்டி-2009' எனக் குறிப்பிட்டு, பணிப்பாளர், கலாசார விவகாரத் திணைக்களம், 8 ஆவது மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். போட்டி விதிமுறைகள் மற்றும் மேலதிக விபரங்களுக்காக 011-2872031 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்பு கொள்ளலாம்.

விஜய்
Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

## 'விஜய்'யில் எழுதுவதற்கு உங்களுக்கும் வாய்ப்பு!

'விஜய்' பத்திரிகையில் ஆக்கங்களை எழுதுவதற்கு திறமையானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. ஆசிரியர்கள், ஓய்வு பெற்ற ஆசிரியர்கள், பல்துறை விற்பன்னர்கள், க.பொ.த (சா/தர), (உ/தர) பரீட்சைகள் எழுதி முடித்தவர்கள் ஆகியோர் விண்ணப்பிக்கலாம். சிருஷ்டிப்பு ஆக்கங்கள் மட்டுமன்றி, மொழிபெயர்ப்பு செய்யக் கூடியவர்களும் விரும்பத்தக்கது. ஊடகத்துறையில் பயிற்சி பெற விரும்புகின்றவர்களும் இதனை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொள்ள முடியும். ஆர்வமுள்ளவர்கள் தமது விபரங்களுடன் கீழ்க்காணும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பம்:
'விஜய்',
த.பெ.எண் 2037,
கொழும்பு.

# மருந்தாகும் திராட்சை



"சீ... சீ...... இந்தப் பழம் புளிக்கும்!" எனக் கூறிச்சென்ற நரியின் கதை பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். அன்று திராட்சைக் கொடியிலுள்ள பழங்களை பறிக்க முடியாமல் நரி சென்றுவிட்டது. ஆனால், இங்கு நாம் கூறப்போகும் தகவல் நரியைப் பற்றியோ நரியின் ஏமாற்றம் பற்றியோ அல்ல. மாறாக, சீ....சீ... என்று நரி கூறிச் சென்ற 'திராட்சை' பற்றியதாகும்; திராட்சையில் அடங்கியுள்ள மருத்துவக் குணங்கள் பற்றியதாகும்.

திராட்சையில் க்ளுகோஸ், சுக்ரோஸ் மற்றும் ஓர்கனிக் அமிலம் என்பன அடங்கியுள்ளன. இவை நமது இரைப்பையை சுத்தம் செய்யக்கூடியன என்பதுடன் எமக்கு ஏற்படக்கூடிய மலச்சிக்கலைத் தீர்ப்பதற்கான உடனடி நிவாரணியாகவும் செயல்படுகின்றன. தினமும் 350 கிராம் திராட்சைப் பழத்தை சாப்பிட்டு வந்தால், வயிற்றில் ஏற்படக்கூடிய எத்தகைய சமிபாட்டுக் கோளாறுகளும் உடனடியாகச் சரியாகிவிடும் என அண்மைய மருத்துவ ஆராய்ச்சியொன்றின் பெறுபேறுகள் தெரிவிக்கின்றன.

அத்துடன், இருதயக் கோளாறுகள் உள்ளவர்கள் தினமும் ஒருவேளை திராட்சையை மட்டும் உணவாக உட்கொண்டு வருவது நன்மை பயக்கும் என்கின்றனர் இயற்கை விஞ்ஞான மருத்துவர்கள். அவ்வாறு உண்ணும்போது, இருதயத்தில் ஏற்படக்கூடிய வலி சிறிது,சிறிதாகக் குறைந்து, இருதயம் பலப்படுவதுடன் இருதயப் படபடப்பும் சீராகும் என அவர்கள் தெரிவித்துள்ளனர். இவைதவிர, இன்னும் பல நோய்களுக்கு மருந்தாகவும் திராட்சை அமைவதாக மேற்படி ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

அடிக்கடி திராட்சை சாப்பிடுபவர்களுக்கு பல் சம்பந்தப்பட்ட நோய்கள் ஏற்படுவது தடுக்கப்படுகிறதாகவும் கூறப்படுகின்றது. பல் ஈறும் பலமாகின்றது. கல்லீரலைப் பலப்படுத்தி, அதன் தொழிற்பாட்டை சீராக்கி, ஊக்கமளிக்கக்கூடிய சக்தி திராட்சைக்கு இருப்பதாகவும் மருத்துவர்கள் கூறுகின்றனர்.

எனவே, இனி நீங்கள் திராட்சைப் பழங்கள் கடைகளில் அல்லது திராட்சைக் கொடிகளில் குலை குலையாக தொங்குவதைப் பார்த்தால் விட்டு வைக்கப் போவதில்லை என்பது தெரியும். அதை அப்படியே சாப்பிடாமல் நீரில் நன்கு கழுவிய பின்னர் சாப்பிடுங்கள். அத்துடன், சளி, இருமல், தொண்டை வலிகளால் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் அத்தருணத்தில் திராட்சை உண்ணுவதைத் தவிர்ப்பது நல்லது.

-ஜீனு

## பாடத்திட்டத்தில் உள்ளடக்கவுள்ள இரண்டு புதிய பாடங்கள்

பாடசாலை பாடத்திட்டத்தில் இனவிருத்தி சுகாதாரம் மற்றும் அது தொடர்பான நோய்கள் குறித்த பாடங்களையும் உள்ளடக்குவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார மற்றும் போஷாக்கு அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

பாடசாலை பாடத்திட்டத்தில் இனவிருத்தி சுகாதாரம் மற்றும் அது தொடர்பாக ஏற்படக்கூடிய நோய்கள் குறித்த கல்வியறிவுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும் என கல்வியாளர்கள் மற்றும் புத்திஜீவிகள் சிலரும் அரசாங்கத்திடம் பரிந்துரைத்திருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அடுத்த இதழில்.....
புதிய தொடர்கதை ஆரம்பம்
பேரழகி வசீலீசா
மந்திர ஜாலங்கள் நிறைந்த மனதை ஈர்க்கும் தொடர்!

60 நாட்களில் தபால் மூல ஆங்கில பாடநெறி
இதோ மீண்டும் இலவச டீசேட் ஒன்றை பெறும் வாய்ப்பு
இலகுவாக ஆங்கிலம் கற்றுக் கொள்ள விரும்பும் அனைவருக்கும் சிறந்த வழிகாட்டி
English Language யின் தபால் மூல ஆங்கில பாடநெறிகள்.
BASIC/SPOKEN ENGLISH & DIPLOMA IN ENGLISH
அடிப்படையில் இருந்த தமிழ் விளக்கத்துடன் கற்றுக் கொடுக்கப்படும் தமிழ் எழுத வாசிக்க தெரிந்து இருந்தால் போதுமானது.

60 நாட்களின் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழ் ஒன்றும்
FREE FREE இலவசம் இலவசம்
பாடநெறியில் இணையும் அனைவருக்கும்
* இலவச 30 days Easy Way English Book Part1
* இலவச அழகிய டீசேட் ஒன்று

இலங்கையின் எப்பாகத்தில் இருந்தும் எம்முடன் இணைய முடியும்
பாடநெறியில் இணைய வயது கட்டுபாடோ, ஆங்கில முன் அறிவோ தேவையில்லை. பாடசாலை மாணவர்கள், தொழில் புரிவோர், தொழில் வாய்ப்பு எதிர்பார்க்கும், இல்லத்தரசிகள் என யாவருக்கும் இணைய முடியும்.
மேலதிக விபரங்களுக்கு 10/- பெறுமதியான 3 முத்திரைகள் அனுப்பி பெறலாம்.
THE ENGLISH LANGUAGE INSTITUTE
P.O. BOX 83, KANDY. Tel: 081-5615561, 0777-220002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காய்ச்சல் வந்தால்?

**காய்ச்சல் என்பது நோய் அறிகுறியாகும். எனினும், காய்ச்சல் என்பது ஒரு நோய் அல்ல. காய்ச்சல் வந்தால் அச்சமடைந்து குழப்பமடைதல் கூடாது. ஆனால், காய்ச்சலின்போது அவதானமாகவும் புரிந்துணர்வுடனும் செயற்படுதல் அவசியமாகும்.**

## காய்ச்சல் ஏற்படுவதற்கான காரணம்

பல காரணங்களினால் காய்ச்சல் ஏற்படக்கூடும். தொற்று அல்லது ஏதேனும் நோயினால் காய்ச்சல் ஏற்படக்கூடும். பக்றீரியா மற்றும் வைரஸ் கிருமிகள் தொற்றினாலும் காய்ச்சல் ஏற்படலாம். இவற்றைத் தவிர உடலில் நீர்த்தன்மை குறைந்து மூட்டுக்களில் ஏற்படும் நோய்களினாலும் காய்ச்சல் ஏற்படக்கூடும்.

## காய்ச்சலை அறிந்து கொள்வது எப்படி?

காய்ச்சலை அறிந்து கொள்ள உடல் வெப்பமானியைப் பயன்படுத்த வேண்டும். வாயினுள் அல்லது கமக்கட்டில் வெப்பமானியை வைப்பதன் ஊடாக காய்ச்சலினை அறிந்து கொள்ள முடியும்.

## உடல் வெப்பமானியினால் காய்ச்சலை அறிந்து கொள்ளும் முறை



வெப்பமானியை நன்கு கழுவிச் சுத்தம் செய்யுங்கள். அதன்பின் நன்கு அதனை உதறவும். பின்னர் மானியை நாக்கின் அடிப்பகுதியில் வைத்து இதழ்களினால் அழுத்திக் கொள்ளுங்கள். ஓரிரண்டு நிமிடங்களின் பின்னர் மானியை எடுத்துப் பாருங்கள். அதில் உள்ள இரசம் உள்ள பகுதியின் அளவினைக் கொண்டு காய்ச்சல் அளவினை அறிந்து கொள்ளமுடியும்.

## அறையின் ஜன்னல் கதவுகளை திறந்து வையுங்கள்



அறைகளின் அனைத்துக் கதவு, ஜன்னல்களைத் திறந்து வையுங்கள். இச்செயற்பாடு அறை முழுவதும் பரவும் கிருமிகளை அழிக்க உதவுகின்றது. அப்பொழுது துரிதமாக காய்ச்சல் தன்மை குறைந்து விடும்.

## காய்ச்சல் என்பது இந்த நிலைமைக்குத்தான்

எமது உடலின் வெப்பநிலை 98.4 பரன்ஹீட் அளவாகவே இருக்கும். செல்சியஸ் அளவில் எனின் 36.9 இற்கும் 37.0 இற்கும் இடையிலானதாக இருக்கும். வெப்பநிலை இந்த அளவினை விட அதிகரிக்குமாயின் அதனை காய்ச்சல் என்று குறிப்பிடமுடியும்.

## உணவு உட்கொள்ளல்



காய்ச்சல் நோயாளிக்கு உணவு அதிகமாகத் தேவைப்படும். காய்ச்சல் வந்தால் வழமையாக உட்கொள்ளும் உணவுகளையே உட்கொள்ள முடியும். காய்ச்சலின் போது உணவு உட்கொள்வது கடினம் எனின், உணவினை சிறிது சிறிதாக நான்கு ஐந்து வேளைகளுக்குக் கொடுங்கள். இல்லாவிடின் 'சூப்' போன்ற திரவ உணவுகளைக் கொடுக்கலாம். இந்த 'சூப்' உணவில் இறைச்சி, மீன்களையும் இடலாம்.

உணவில் விருப்பமில்லாவிடின் உங்களுக்குப் பிடித்தமான உணவுகளை உட்கொள்ளுங்கள். சளி, இருமல் இல்லாவிடின் பழச்சாறுகளை அருந்தலாம். எண்ணெயில் வறுத்த, பொரித்த உணவுகளையும் உட்கொள்ளலாம். காய்ச்சல் குறைந்த பின்னரும் இரு வாரங்களுக்கு உணவுகளை அதிகமாக உட்கொள்ளுங்கள்.

## மின்விசிறியை சூழல விடுங்கள்



காய்ச்சல் வந்த ஒருவர் இருக்கும் அறையில் மின்விசிறியை சூழல விடுவது தவறல்ல. அது காய்ச்சலைக் குறைக்க உதவும்.

## துணியினால் நனையுங்கள்

நீரில் நனைத்த துணியினால் கை கால்களைத் துடைத்து விடுங்கள். நெஞ்சில் சளி இல்லாவிட்டால் நெஞ்சு, முதுகு, கமக்கட்டு உட்பட முழு உடல் பகுதிகளையும் ஈரத் துணியினால் துடைத்து விடுங்கள். இதனால், உடலில் உள்ள இரத்தக் குழாய்கள் தூண்டப்பட்டு வெப்பத்தினை வெளியேற்ற உதவுகின்றது.

## இறுக்கமான ஆடைகளைத் தவிருங்கள்

சிலர் காய்ச்சலின்போது அதிக ஆடைகளை அணிந்து கொள்வர். துணிகளினால் போர்த்திக் கொள்வர். இது தவறாகும். இதனால், உடலில் இருந்து வெப்பம் வெளியேறாது. உடல் வெப்பநிலை அதிகரிக்கும்.

## நீராகாரங்களை உட்கொள்ளுங்கள்



காய்ச்சலின்போது சுவாச வேகம் அதிகமாக இருக்கும். வியர்வையும் அதிகம் வெளியேறும். உடலில் நீர்த்தன்மை குறையும். இதனால், காய்ச்சல் ஏற்பட்டால் நீராகாரங்களை அதிகம் உட்கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரிய குடும்ப அங்கத்தவர்கள்

(தொடர்ச்சி...)

## வெள்ளி (Venus)



* பூமிக்கு மிக அருகில் உள்ள கோள்.
* இதன் விட்டம்: 12,032 கி.மீற்றர்.
* உபகோள்கள்: இல்லை.
* ஒருமுறை சூரியனைச் சுற்ற எடுக்கும் காலம்: 246.16 நாட்கள்.
* சூரியனில் இருந்து சராசரி தூரம் : 10,75,20,000 கி.மீற்றர்.
* உதய நட்சத்திரம் (Morning Star), மாலை நட்சத்திரம் (Evening Star) என்றும் இதனை அழைக்கின்றனர்.
* வெப்பம் மிகுந்த ஒரு கோள்.
* வெள்ளியின் வெப்பத்தின் அளவு: 462°C
* ஒளி மிகுந்த ஒரு கோள்.
* ஒருமுறை தன்னைத்தானே சுற்ற மிக அதிக காலம் எடுத்துக்கொள்ளும்.
* கிழக்கிலிருந்து மேற்காகச் சுற்றும் ஒரே கோள்.
* இதில் காணப்படும் முக்கிய வாயு: காபனீரொட்சைட்.
* கந்தக அமில மேகங்களால் சூழப்பட்டுள்ளதால் இதை இலகுவாகப் பார்க்க முடியாது.
* அளவிலும் திறையிலும் பூமியைப் போன்றிருப்பதால் இது பூமியின் இரட்டைக் கிரகம் (Twin Planet) என்றும் அழைக்கப்படுகின்றது.

## செவ்வாய் (Mars)



* இதனை சிவப்புக் கோள் அல்லது செங்கோள் என அழைக்கின்றனர்.
* மார்ஸ் என்பது ரோமானிய போர்க்கடவுளின் பெயராகும்.
* விட்டம்: 6755.2 கி.மீற்றர்.
* துணைக்கோள்கள்: இரண்டு.
* ஒருமுறை சூரியனைச் சுற்ற எடுக்கும் காலம்: 687 நாட்கள்
* தன்னைத்தானே ஒருமுறை சுற்றிவர எடுக்கும் காலம்: 24 மணி, 37 நிமிடம், 25.1 செக்கன்.
* சூரியனில் இருந்து தூரம்: 22,56,00,000கி.மீற்றர்.



* இதற்கு டீமொஸ், ஃபோபொஸ் என இரு துணைக்கோள்கள் உள்ளன.
* இதன் நிறை பூமியின் நிறையில் 1/10 பங்கு ஆகும்.
* துணைக்கோளான ஃபோபொஸ் 'கறுப்புச் சந்திரன்' (Black Moon) என அழைக்கப்படுகின்றது.
* புவியைப் போலவே செவ்வாயிலும் பகல்-இரவு ஒரே கால அளவுதான்.
* உறைந்த கார்பன்டயொக்சைட் காணப்படுகின்றது.
* Voyager II செவ்வாய் ஆராய்ச்சிக்காக அமெரிக்காவால் அனுப்பப்பட்ட விண்கலம்.
* இது தவிர, Mars, Global, Surveyor, Mars Odyssey என்ற கலங்கள் இப்பொழுதும் செவ்வாயை வலம் வந்து கொண்டிருக்கின்றன.
* 2004 ஆம் ஆண்டு ஜனவரி 15 இல் ஸ்பிரிட் எனும் ரொபோ இயந்திரம் செவ்வாயில் தரை இறங்கியது.
* 2008 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆம் திகதி ஃபீனிக்ஸ் ஆய்வுக்கலம் செவ்வாயில் தரையிறங்கியது.

## புதன் (Mercury)

* மிகக் குறைந்த ஈர்ப்பு விசையைக் கொண்ட கோள்.



* சூரியனுக்கு மிக அருகிலுள்ள கோள்.
* இதன் விட்டம்: 4849.6 கி.மீற்றர்.
* உபகோள்கள்: எதுவும் இல்லை.
* சூரியனைச் சுற்ற எடுக்கும் காலம்: 87.97 நாட்கள்.
* சூரியனில் இருந்து சராசரி தூரம்: 5,76,00,000 கி.மீற்றர்.
* சூரியனைச் சுற்றிவர மிகக் குறைந்த காலமே எடுக்கின்றது.
* மணிக்கு 176,000 கி.மீற்றர் வேகத்தில் மிக வேகமாக சூரியனைச் சுற்றிவரும் அதிவேக கோளாகும்.
* புதனைப் பற்றிய ஆய்விற்காக 2004 ஒகஸ்ட் 3 ஆம் திகதி நாஸா அனுப்பிய 'மெசெஞ்சர்' எனும் விண்கலம் 2011 இல் புதனைச் சென்றடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.
* புதனின் மேற்பரப்பின் முக்கிய வாயு காபன்டயொக்சைட் ஆகும்.
* இது கோள்களில் மிகச் சிறியது.

(முற்றும்)



# ரஷ்ய-அமெரிக்க செயற்கைக்கோள்களின் மோதல்



விண்வெளியில் முதன்முதலாக ஒரு விபத்து ஏற்பட்டுள்ளது. செயல் இழந்து இருக்கும் ரஷ்யாவின் செயற்கைக்கோள் மீது அமெரிக்காவின் தகவல் தொடர்பு செயற்கைக் கோள் மோதியமையே அந்த விபத்தாகும்.

பூமியில்தான் வாகனப்பெருக்கம் காரணமாக நாள்தோறும் விபத்துக்கள் நடக்கின்றன என்றால், இப்போது விண்வெளியிலும் விபத்துக்கள் நடக்கத் தொடங்கிவிட்டன. தற்போது, விண்வெளிக்கும் அதிக அளவில் செயற்கைக்கோள்கள் அனுப்பப்பட்டு வருவதோடு, அங்கு அவற்றின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருக்கின்றமையே இந்த விபத்துக்குரிய காரணமாகக் கூறப்படுகின்றது.

18 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இயந்திரக் குப்பைகள் விண்வெளியில் இருக்கும் நிலையில், செயல் இழந்த செயற்கைக்கோள்களும் பூமியின் சுற்றுப் பாதையில் சுற்றி வருவதாக கூறப்படுகின்றது.

இவ்வாறு சுற்றி வரும் செயற்கைக் கோள்களில் ரஷ்யாவின் செயற்கைக் கோளும் ஒன்றாகும். இது 1993 ஆம் ஆண்டு ஜூன் மாதம் தகவல் தொடர்புக்காக அனுப்பப்பட்டு, தற்போது செயல் இழந்துள்ளது. இதன் எடை 800 கிலோ கிராம் ஆகும். இதன் மீதே அமெரிக்காவின் தனியார் தகவல் தொடர்பு செயற்கைக் கோள் மோதியுள்ளது. இந்த விபத்து, சைபீரியாவுக்கு 780 கி.மீற்றர் உயரத்தில் இரு வாரங்களுக்கு நடந்துள்ளது.

இதனால், செயற்கைக் கோள்கள் நொருங்கியுள்ளன. இதன் மூலம் வான குப்பைகளால் சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி நிலையத்துக்கு ஆபத்து ஏற்படுமா? என்ற அச்சம் விஞ்ஞானிகளிடையே நிலவி வருகின்றது.

இந்நிலையில், வானத்தில் இருந்து தீப்பந்து போன்ற சில பொருட்கள் அமெரிக்காவின் டெக்சாஸ் நகரில் விழுந்துள்ளன. செயற்கைக்கோளின் உடைந்த பாகங்கள்தான் டெக்சாஸ் நகரில் விழுந்ததாக சிலர் தெரிவிக்கின்றனர். எனினும், இது இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை.

இதைத் தொடர்ந்து, அமெரிக்க வான்போக்குவரத்து அமைப்பு உலகம் முழுவதும் உள்ள விமானிகளுக்கு ஓர் எச்சரிக்கை விடுத்துள்ளது. விண்ணில் புதிதாக 500 முதல் 600 இயந்திரக் குப்பைகள் உருவாகி உள்ளன. விபத்து ஏற்பட்ட இடத்துக்குக் கீழாக 350 கி.மீற்றர் தூரத்தில் சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி நிலையம் சுற்றி வருகிறது. அந்த நிலையத்தில் 3 விண்வெளி வீரர்கள் தங்கியிருந்து ஆராய்ச்சிகளை நடத்தி வருகிறார்கள். புதிதாக உரு செயற்கைக்கோள்கள் மோதிக் கொண்டதைத் தொடர்ந்து, அதன் உடைந்த பாகங்கள் பூமியைச் சுற்றிக் கொண்டிருக்கும் அதே வேளை, அவை பூமி மீது விழுந்து விமானங்களுக்கும் ஆபத்தை ஏற்படுத்தலாம் என்று அவர்கள் எச்சரித்து இருக்கிறார்கள்.

தபால் மூல ஆங்கில பாடநெறி ENGLISH Course
நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்தவாறே எம்முடன் இணைந்து ஆங்கிலத்தை சரளமாகவும் தெளிவாகவும் கற்றுக் கொள்ள முடியும்
* கிளாஸ் போகும் காலம் நேரம் மீதி / வீண் கட்டணங்கள் இல்லை
* குருகிய காலம் என்பதால் 1 மாதத்தில் பாடநெறியை முடிப்பதால் பயன் இல்லை
* அடிப்படையில் இருந்தே கற்றுக்கொடுக்கப்படும்
பாடநெறியில் இணையும் அனைவருக்கும் அழகிய பேக் ஒன்றும் Tigo Sim Card (தொலைபேசி இணைப்பு) ஒன்றும் வழங்கப்படும்
முதல் இணையும் 500 மாணவ/மாணவிகளுக்கு மாத்திரமே Tigo Sim ஒன்று இலவசம்
இந்த Diploma சான்றிதழ் உங்கள் கல்வித்துறை, மற்றும் தொழில் வாய்ப்புக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு துணையாக அமையும்
மேலதிக விபரங்களுக்கு பெயர், முகவரியுடன் 15/= பெறுமதியான 2 முத்திரை அனுப்பி பெறலாம்
UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. Tel: 0773 123 523
மாற்று வழிகளிலோ, மறைமுகமான கட்டணங்களோ அறவிடப்படமாட்டாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனிதனின் பல தேவைகள



**உயிரினங்களின் நீண்ட ஆயுளுக்குத் தேவைப்படும் உணவைப் பெறவும் சூழலில் உயிரினம்- உயிரினம் அல்லாதவற்றுக் கிடையில் சமநிலையைப் பேணவும் தாவரங்கள் அளவிட முடியாதளவு நன்மைகளை செய்கின்றன. மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரையில் தாவரங்களால் இத்தகைய நன்மைகள் கிடைத்த வண்ணமுள்ளன.**

## உணவுத்தேவை

நாம் எமது அன்றாட உணவுக்காக பலவகையான தாவரங்களைப் பயன்படுத்துகின்றோம். அவ்வாறு பயன்படும் உள்நாட்டுத் தாவரங்கள் 200 வகைகள் உள்ளன. அவற்றுள் அநேகமானவை விவசாயச் செய்கை ஊடாக கிழங்காக, இலையாக, தண்டாக, பூ, வேர், காயாக முழுமையாக அல்லது பகுதி பகுதியாக உணவுக்காகப் பயன்படுகின்றன. எமது உடலுக்குத் தேவைப்படும் முக்கியமான விற்றமின்கள், புரதச் சத்துக்கள், கனியுப்புக்கள், கொழுப்பு, புரோட்டின்கள் என்பன இந்தத் தாவரங்கள் ஊடாகக் கிடைக்கின்றன.

சோளம்,நெல்,குரக்கன்,கமுகு, மரவள்ளி ஓட்ஸ் (Avenasatira) போன்றவை இதற்கு சிறந்த உதாரணங்களாகும்.

## சவ்வரிசி

சோகோ பிளம் (Sago palm) என்றழைக்கப்படும் Metrorylon saga என்ற விஞ்ஞானப் பெயர் கொண்ட தாவரத்தில் இருந்து சவ்வரிசி பெறப்படுகின்றது. இத்தாவரத்தின் தண்டின் நடுப்பகுதியில் உள்ள திரவத்தை மா போன்ற பதப்படுத்தலுக்கு உட்படுத்தி சவ்வரியாகப் பெறப்படுகின்றது. இத்தாவரம் ஆசியாவின் பல பகுதிகளில் செழித்து வளரக் கூடியதாகும்.

## சீனி

தாவரங்களில் இருந்து பெறப்படும் சர்க்கரை வகைகளில் கரும்பில் இருந்து பெறப்படும் சீனிக்கு முக்கிய இடம் வழங்கப்படுகின்றது. கரும்புத் தாவரத்தின் விஞ்ஞானப் பெயர் saccharum officinarum என்பதாகும். இத்தாவரத்தில் இருந்து பெறப்படும் சாற்றைப் பதப்படுத்தி திண்ம நிலை அடையச் செய்து அதனைத் தூள் ஆக்குவதன் மூலம் சீனி உருவாக்கப்படுகின்றது. அதே போன்று பீட்றூட் கிழங்கில் (Beta Valgaris) இருந்து பெறப்படும் சாறு மூலமும் சீனி தயாரிக்கப்படுகின்றது. இனிப்பு தயாரிப்பதற்குத் தேவையான பாணி, கித்துல், கருப்பட்டி என்பன தென்னை, பனை ஆகிய மரங்களில் இருந்தும் பெறப்படுகின்றன. சீனித் தயாரிப்புக்கு மேலதிகமாக மதுசாரத் தயாரிப்பும் இத்தாவரங்களில் இருந்து பெறப்படும் பாணி மூலம் நடைபெறுகின்றது.

## தாவரத்தின் தும்பு

பயன்மிக்க தாவரங்களில் சில வகையான தாவரங்களின் தும்பு முக்கியத்துவம் பெறுகின்றது. தாவரத்திற்கு பலத்தைக் கொடுப்பது இத் தும்பாகும். தும்பு மனிதனின் பல விதமான தேவைப்பாடுகளை நிறைவு செய்கின்றது. சில வகையான தாவரங்களில் காணப்படும் நார் மற்றும் தும்பு என்பன இவ்வாறு பயன் தருபவையாகும். அவை பளிச்சிடும் தன்மை கொண்டு காணப்படுகின்றன. Sanseviera, Bast fibers, Jute ஆகிய இனத்தாவரங்களில் இருந்து இத்தகைய மூலப் பொருட்கள் பெறப்படுகின்றன. பட்டு அல்லது பஞ்சு :- இவை பருத்தித் தாவரத்தின் காயின் உள்ளே உற்பத்தியாகின்றன. தேங்காய் உரிக்கப்பட்ட பின்னர் அதன் மட்டையில் இருந்தும் பனை மரத்தில் இருந்தும் தும்பு பெறப்படுகின்றது.

வர்த்தக நோக்கத்திற்காக இந்த வகை நார், தும்பு என்பன பயன்படுவது போன்று கிராமப்புற மக்கள் பாய், தட்டு, பெட்டி, உறை, தொப்பி போன்றவற்றை செய்யவும் இவ் வகை மூலப் பொருட்களைப் பயன்படுத்துகின்றனர். பன்புல் குடும்பத் தாவரங்களாவன:

- Cyperas cozymbosus
- Schoenople ctusgrosus
- Eleocharis dulcis
- Pandanus spp

ஆகிய நான்கு வகை இனங்களை சேர்ந்த பன்புல் தாவரங்கள் உள்ளன. இவற்றுக்கு மேலதிகமாக தாளம் வகைகளும் உள்ளன.

## வர்ணச்சாய வகைகள்

தாவரங்களைப் பயன்படுத்தி வர்ணச் சாய வகைகள் தயாரிக்கப்படுவது தொன்றுதொட்டு இருந்துவரும் செயற்பாடாகும். சில வகையான தாவரங்களில் காணப்படும் சாற்றைப் பிழிந்தெடுத்து வர்ணப் பூச்சுக்களாகப் பயன்படுத்துவது பண்டைய காலம் முதல் நடைமுறையில் இருந்து வருகின்றது. நவீன காலத்தில் அத்தகைய தாவரச் சாறுகளை ரசாயனப் பதார்த்தங்களுடன் கலந்து மேலும் ஒருபடி முன்னேற்றகரமான முறையில் இந்த சாய வகைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. தாவரங்களை இடித்துப் பிழிந்து சாறு பெறுவதன் மூலம் அல்லது அவை அழுகுவதால் அல்லது அவித்து எடுப்பதன் மூலம் இத்தகைய வர்ணப் பூச்சுக்கள் பெறப்படுகின்றன.

## அத்தகைய தாவரங்களில் சில....

- **பாக்கு:** கறுப்பு நிறச்சாயம் பெறப்படுகின்றது.
- **மருதாணி இலை:** செம் மஞ்சள் அல்லது இளம் சிவப்பு நிறச்சாயம்.
- **பலாக்கம்பு:** மஞ்சள் நிறச் சாயம்.
- **நில்அவரி (Indigigofear tinctoria):** நீலச்சாயம்.
- **சிவப்புச் சந்தனம்:** சிவப்பு, ஊதா நிறச்சாயம்.
- **பதுல்லை மரம் (Senecarpus anaeardium):** இந்த மரத்தின் பட்டையில் இருந்து கறுப்பு நிறச்சாயம்/ பூச்சு.



## வாசனைத் திரவியம்

உணவு வகைகளுக்கு சுவையூட்டும் வாசனைப் பொருட்கள் பல தயாரிப்பதும் இத்தகைய தாவரங்கள் மூலம் ஆகும். பண்டைய காலம் முதல் இலங்கை மேற்கு நாட்டவர்களின் வர்த்தக வாணிப கேந்திர நிலையமாக அமைந்ததற்கு முக்கிய காரணம் இங்கு விளையும் வாசனைத்திரவியங்களாகும். இத்தகைய தாவரங்களில் உள்ள ரசாயனப் பதார்த்தங்களுக்கு நிகரான சாறு அல்லது உலர்த்தி அரைத்து எடுக்கும்போது பெறப்படுகின்ற துகள்கள் வாசனையையும் உணவுக்கு சுவையையும் தருவதாக உள்ளன.

1. கறுவா
2. மிளகு
3. கராம்பு
4. ஏலம்
5. சாதிக்காய்
6. வெனிலா
7. மிளகாய் வகைகள்
8. இஞ்சி
9. மஞ்சள் என்பன இத்தகைய வாசனைத் திரவியங்கள் ஆகும்.

## கொழுப்பு மற்றும் எண்ணெய்

தாவரங்களில் இருந்து பெற்றுக் கொள்ளப்படும் எண்ணெய் இரண்டு வகைகளாகும். இவற்றை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ளை நிறைவேற்றும் தாவரங்கள்





எண்ணெய் வகைகள் ஆகும். இந்த வகையான தாவரங்களின் பட்டையில் இருந்தும், பருப்பில் இருந்தும் காயில் இருந்தும் தண்டு மூலமும், இலைகள் மூலமும், வேர் மூலமும், பூ வாயிலாகவும் இவ்வகைத் தைலம் அல்லது எண்ணெய் வகைகள் பெறப்படுகின்றன.

பூக்களும் இவ்வகை எண்ணெய், வாசனைப் பொருட்கள், தைலம் என்பன தயாரிப்பதற்கு பயன்படுகின்றன. இவ்வாறு தயாராகும் எண்ணெய் தைலம், கொழுப்பு, புரதம் என்பன உணவுக்காகவும் சுவை யூட்டிகளாகவும் அழகுக்கலைத் தேவைகளுக்காகவும் வாசனைப் பொருளாகவும் பயன்படுகின்றன.

நாம் தாவரப் புரதம் அல்லது கொழுப்பு என்றும் அழைக்கின்றோம்.

1. விரைவாக உஷ்ணமடையாமல் குளிர்ச்சியடைந்த நிலையில் உறையும் எண்ணெய். (கொழுப்பு)

உ+ம்:- தேங்காய்ப்பால்,கொப்பரா, ஆமணக்கு, பருத்தித் தாவரத்தால் பெறப்படும் எண்ணெய், நிலக்கடலை எண்ணெய், ஒலிவ் எண்ணெய், சூரிய காந்தி எண்ணெய் என்பனவாகும். இலுப்பை,கடுகு ஆகியவற்றில் இருந்து பெறப்படும் எண்ணெயும் (கொழுப்பு) இவ்வகையில் அடங்கும்.

2. விரைவில் உஷ்ணமடையும் வாசனை தரும் சுவைமிகு எண்ணெய் அல்லது தைலம் கருவா, எள்ளு, சந்தனம், பெங்கிரி இனத்தாவரம் ஆகியவற்றில் இருந்து பெறப்படும்

## தாவரத்தால் பெறப்படும் மெழுகு

எண்ணெய், கொழுப்புக்கு மேலதிகமாக தாவரங்கள் மூலம் மெழுகும் (Wax) தயாரிக்கப்படுகின்றது.

'சுண்டெலியா' என்ற மெழுகு வகை 'மெக்சிகோ' என்ற தாவரத்தின் ஊடாகப் பெறப்படுவதாகும்.

இத்தாவரத்தை அவிப்பதன் மூலம் மெழுகு பெறப்படுகின்றது. சிலவகையான தாவரங்களில் இருந்து பெறப்படும் பால் மூலம் சாம்பிராணி போன்றவை தயாரிக்கப்படுகின்றன.

## இரசாயனப் பதார்த்தங்கள்

மெனிக், அல்கலொய்ட் போன்ற ரசாயனப் பதார்த்தங்கள் தாவரங்கள் மூலமே பெறப்படுகின்றன. இவ்வாறான தாவரங்கள் அநேகமாக மருந்து மூலிகைச் செடிகளாகவே உள்ளன.

## அல்கலொய்ட்

தெனின் (Thenine) என்ற இந்த பதார்த்தம் தேயிலைச் சாயத்தில் (கஹட்ட) Camelha sinensis பெறுவதாகும். இத்தாவரத்தின் தண்டு மூட்டுக்களில் இந்த சாயம் தேங்குகின்றது.

## கபின் (Caffein)

இந்தப் பதார்த்தம் கோப்பித் தாவரத்தில் காணப்படுகின்றது. இத்திரவம் உடம்புக்கு புதுத் தெம்பைக் கொடுக்கின்றது. நரம்புச் செயற்பாட்டைத் தூண்டுவதாக இருக்கின்றது.

## தியோபுரோமின் (Theobromine)

இந்தப் பதார்த்தம் 'கொகோ' தாவரத்தின் விதைகளில் இருக்கின்றது. இந்த திரவமும் உடலுக்கு உற்சாகத்தை ஊட்டக் கூடியதாகும்.

## நிகோடின் (Nicotine)

இப்பதார்த்தம் புகையிலையில் காணப்படுகின்றது. இந்த 'நிகோடின்' பதார்த்தமும் உடம்புக்கு புதுத்தெம்பை ஊட்டக் கூடியதாகும்.ஆனாலும்,உடல் நலத்திற்கு கேடு விளைவிக்கக்கூடியதாகும்.ஒரு சிகரட்டில் உள்ள 'நிகோடின்' அளவு ஒரு மனிதனின் வாழ்நாளில் 13 செக்கன் ஆயுளைக் குறைக்கக்கூடியதாகும் என்று ஆய்வுகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது.

## குவினிக்

இத்திரவம் 'குயினய்ன்' என்றும் அழைக்கப்படுவதுண்டு.சின்கோனாத் (Cincona) தாவரத்தில் இருந்து பெறப்படுகின்றது. இதுவொரு மருத்துவப் பதார்த்தமாகும்.

## மொபின்

இந்தப் பதார்த்தம் பொப்பித் தாவரத்தில் காணப்படுவதோடு இது ஒரு வகைப் போதைப் பொருளாகவும் பயன்படுத்தப்படுகின்றது.அதே போன்று வெற்றிலை, வேம்பு, மஞ்சள் போன்ற தாவரங்களில் இருந்தும் இன்னும் பல ரசாயனப் பதார்த்தங்கள் பெறப்படுகின்றன.திராட்சை, அப்பிள், பார்லி ஆகியவற்றில் இருந்து மதுசார வகைகள் (போதையூட்டும் பானங்கள்) தயாரிக்கப்படுகின்றன. ஆனாலும், இவற்றில் இருந்து தயாரிக்கப்படும். பானங்கள் ஆரோக்கிய பானங்களாக உள்ளன. ஆனால், இவற்றுடன் 'அல்கஹோல்' கலப்படம் செய்யப்படும்போதே அவை போதையூட்டும் பானங்களாக மாறுகின்றன.

## பால்

சில வகையான தாவரங்களில் இருந்து கிடைக்கும் திரவத்தன்மையான பால் பல்வேறு விதமான உற்பத்திக்கு மூலப் பொருள்களாகப் பயன்படுத்தப்படுகின்றன.உ+ம்: இறப்பர் மரத்தில் இருந்து பெறப்படும் பாலானது இறப்பர் உற்பத்திக்கான மூலப் பொருளாகும். பப்பாளியில் இருந்து பெறப்படும் பால் 'பென்சிலின்' மற்றும் மருந்து வகை தயாரிப்பிற்கான மூலப்பொருளாகும்.

## கைப்பணிப் பொருட்கள்

மூங்கில், குழாய் வகைத்தாவரம், பிரம்புத் தாவரம், பன்புல் தாவரம், தாளம் வகைத்தாவரம் என்பன மனிதனின் அன்றாட தேவைகளுக்குப் பயன்படுத்தப்படும் அலங்காரப் பொருட்கள் மற்றும் தளபாடப்பொருள் உற்பத்திக்குப் பயன்படுகின்றன.

## மரத்தளபாடம்

கடினமான மரங்கள் தளபாட உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

உ+ம்: தேக்கு,முதிரை,வேம்பு, பலா, மருதம்,அல்பீசியா,நாகமரம்,மகோகனி போன்ற இன்னும் பல வகையான மரங்களைக் குறிப்பிடலாம்.

## மருந்து வகை

உலகில் இன்று தயாரிக்கப்படும் மேல்நாட்டு மருத்துவ முறையில் இடம்பிடித்துள்ள மருந்து வகை தயாரிப்பிற்காக 140 இற்கும் மேற்பட்ட மருந்து மூலிகைகள் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றுள் சில எமது நாட்டில் காணப்படுவதோடு இன்னும் சில உலகின் ஏனைய பிராந்தியங்களில் வளரக்கூடியவையாகும்.

## எரிபொருள் பிரச்சினைக்கு தீர்வாக...

இன்று உலகம் எதிர்நோக்கி வரும் எரிபொருள் பிரச்சினைக்குத் தீர்வாக தாவரங்களில் இருந்து எண்ணெய் உற்பத்தி செய்வது தொடர்பாக விஞ்ஞானிகளது அவதானம் ஈர்க்கப்பட்டிருக்கின்றது. இதற்காக ஆமணக்கு, முருங்கை, கரும்பு போன்ற தாவரங்கள் பயன்படுத்தப்படும் சாத்தியங்கள் உள்ளன.

எனவே, நாம் வாழும் சூழலில் காணப்படும் தாவரங்கள் எமக்கு சர்வ சாதாரணமானதாகத் தென்பட்டாலும் அவை மானிடவர்க்கத்தின் தேவைப்பாடுகளில் ஏதோ ஒன்றை அல்லது பலவற்றை நிறைவு செய்யக்கூடியதாகும் என்பதை அறிந்தால் அவற்றைப் பொறுப்புடன் பாதுகாக்க வேண்டும் என்ற ஆர்வம் நமக்கு ஏற்பட்டுவிடும் என்பதில் சந்தேகமில்லை.



அமீர் ஹாமசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ‘ரொட்டோமெக்’ போட்டியில் வெற்றியீட்டிய அதிர்ஷ்டசாலிகள்!

(கடந்தவார தொடர்ச்சி)

**பரிசுப்பொதிகள் வெற்றியீட்டியோர்**

சி.எஸ்.அலுத்கே-ஹொரண,பி.டீ.ஜெயசேகர-மொரட்டுவ, அபிநேஷ்-வவுனியா, எம்.எச்.ஹமீத்-கொழும்பு-10, கு.அஷினி-தெஹிவளை, கே.சந்ரவத்த-வாரியபொல, ஷஹானலி மிஸ்கின்-பிலியந்தல, டீ.சஹன்-களனி, எம்.கவிஷான்-மாத்தளை, வை.அதிகாரி-பானங்கொட, எம்.மன்ஸீர்-பொலன்னறுவை,எம்.நல்விடிகல-நுகேகொட, மிஸ்தாக்-தெமட்டகொட,எஸ்.ஹுசைன்-தெமட்டகொட, வி.கருணாசேன-பெலிஹுலோயா, ஜி.விஸ்வநாதன்-டயகம, எஃப்.ரிஷாமிலா-ஹிங்குல, முன்சிரா-வெலம்பொட, எஃப்.சரூஃபா-காத்தான்குடி-04, எஃப்.நஸீலா-தெவங்கல,என்.ஹஷீம்-தொடங்கஸ்லந்த, ஆர்.முஸம்மில்-கந்தேகெதர, யு.தங்கபாலு-கொழும்பு-13, ஏ.நுஜிரா-நாரம்மல, சி.சுபுன்-தெதிகமுவ, ஏ.ரணசிங்ஹ-ரத்னபுர, எஃப்.இலியாஸ்-கம்பளை, ஐ.சமரநாயக்க-முறுதலாவ, ஜி.அபேரத்ன-ரத்னபுர, ஏ.மதுபாஷினி-பன்னிப்பிட்டிய, இஸட்.புஹாரி-தெமட்டகொட, எம்.அஸ்வத்-ஏறாவூர், ஏ.காசிம்-கடுருவெல, ஏ.சஃபான்-கிரிபத்கொட, எஸ்.இன்திகாப்-பதுளை, எம்.ரஸ்லான்-புத்தளம், எம்.தனஞ்ஜய-நாவலப்பிட்டி,எம்.நகீப்-கல்முனைக்குடி-09, ஆர்.தினேஷ்தரன்-கொழும்பு-12, வி.விஜயபிரியா-கொழும்பு-8, எம்.ஃபஸ்லான்-களுத்துறை தெற்கு, மஹேஷி லக்மாலி, எஹலியகொட, எல்.பிரியதர்ஷன-எஹலியகொட, ஏ.லதீஃப்கான்-பொல்கஹாவெல, எஸ்.குமார்-வவுனியா, எம்.முஸ்தகீம்-ஏறாவூர், எம்.ரேணுகா-எல்கடுவ, ஜே.அன்திரினிஸ் பெரிட்ரோ-தலைமன்னார், ஏ.ஜெயதிலக-நாரம்மன.

**டீ-ஷேர்ட்டுகள் வெற்றியீட்டியோர்**

எம்.மஸார்-காலி, எஸ்.அகிஸ்-சிலாபம், ஜி.சுபசிங்ஹ-நாரங்கொட, கே.கமகே-ஹங்வெல்ல, எஸ்.கிதுல்கொட-ஹங்வெல்ல, ஆர்.பானு-புபோகம, பி.தனஞ்ஜய-வெல்லம்பிட்டி, சி.நதீரா-மாத்தறை, எச்.பண்டாரவத்த-ரத்னபுர, வி.லியனகே-ரத்னபுர, எஸ்.வெலல்லவிட-ரத்னபுர, எம்.மந்தாகினி-ரத்னபுர, எச்.குமாரி-நுவரெலியா, எம்.விதரண-எம்பிலிப்பிட்டிய, எஸ்.விஜேவர்தன-திவுலப்பிட்டிய, டீ.பெர்னான்டோ-கொழும்பு-8, எம்.சமரகோன்-நாரங்கொட, பி.ரத்னாயக-மஹியங்கன, எஸ்.பெரேரா-திருகோணமலை, எம்.போல்-திருகோணமலை, யு.சதமல்-தெமட்டகொட, ஏ.நஸீர்-கொழும்பு-10, பி.கருணாரத்ன-பிலியந்தல, எஸ்.ரோவல்-நாத்தான்டியா, எஸ்.வில்காசீம்-காலி, கே.ஹேவகே-காலி, எம்.முல்லேகம-கலவான, என்.பெரேரா-பண்டாரகொஸ்வத்த, டீ.களுத்துராச்சி-பிலியந்தலை, சி.சுகித்-மட்டக்களப்பு, என்.வர்ணசுர்ய-கடுகஸ்தொட, எல்.மனுஜிதா-அங்கொட, எம்.ஜெயவர்தன-கொஹுவல, எஸ்.ஸ்ரீவன்ஸபுர-கொஸ்கொல்ல, பி.பாஷினி-லுணுகல, எஃப்.ஹம்தா-பானகமுவ, எஸ்.ரந்துனு-தேதுவன, எஸ்.அபேரத்ன-ஹோமாகம, பி.பதுமஜோதிதியரோ-பூதல்ல, டி.விராஜ்-கிரிவத்துதுவ, எம்.முதுகல-வெள்ளவா, எம்.தேனல்-மாரவில்ல, சி.ரத்நாயக்க-சிபலந்துவ, ஏ.பானு-புத்தளம், இ.பீரிஸ்-ரத்மலானை, வை.பொன்சேகா-பிலியந்தல, பி.பாத்திமா-கலேவெல, டீ.ஜெயவர்தன-கேகாலை, எம்.தெமட்டபிடிய-மஹரகம,எஸ்.விதரன-அவிசாவளை, சி.பெரேரா-ரணல, என்.ஜரீனா-மெனிக்ஹின்ன, எம்.சமிந்ரா-மொனராகல, எஃப்.ஃபாஹிரா-கண்டி, டி.முனசிங்ஹ-ரபுக்கன, வை.நிலுக்ஷி-தலஹென, எம்.ஸஹ்தி-தர்கா நகர், ஜே.ஆதிஃபா-அகுரஸ்ஸ, ஆர்.தரங்க-தெனிபிடிய, சி.தனசிங்ஹ-கொழும்பு-09, எம்.அஃப்ஹாம்-புத்தளம், ஏ.கௌஷல்யா-ரத்னபுர, ஏ.குமார-மொரட்டுவ, யு.ஜெயதிலக-தியத்தலாவ, ஏ.இந்ரா-இம்புல்கொட, சி.சஹரீஸா-சாய்ந்தமருது-09, டி.மதுஷான்-உருகமுவ, பி.ருட்ரிகு-கொழும்பு-12, டி.கல்ஹர-தெனிபிடிய, ஆர்.கருணாதிலக-புத்தளம், என்.நஸீர்-தர்கா நகர், என்.குணதிலக-பூருவெதந்த, டி.விமல்சேன-கேகாலை, கே.லங்கேஸ்வரா-களுத்துறை வடக்கு,என்.மதுமாலி-தொம்பே,ஐ.மதுஷிகா-மாத்தறை, எம்.நசிக்-தெவனாகல, எச்.பொன்சேகா-குருவிட்ட, டீ.மதுஷான்-எம்பிலிப்பிட்டிய, எம்.நப்ரான்-கலஹா, ஆர்.சுபசிங்ஹ-கிரிந்திவெல,எச்.மதுஷங்க-பனவென்ன, எஸ்.கிதுல்கொட-யங்குருவதோட்ட, ஏ.முஹம்மட்-மாவனல்ல, எஃப்.அஃப்ரா-வெலம்பொட, எம்.மதுஷான்-கிரிந்திவெல, என்.கும்புக்ககே-பன்னிப்பிட்டிய, எஸ்.அஸென்-ராகம, டி.லக்மாலி-கஹவத்த, எஃப்.நஸுஹா-காத்தான்குடி, ஐ.ராஜபக்ஷ-பட்டபொல, எஃப்.ஹஸ்னியா-நாரம்மல, எஸ்.சசித்ரா-பொரலஸ்கமுவ, பி.ப்ரனீத்-அம்பாறை, எல்.வனசிங்ஹ-பொதுஹெர, எஸ்.ரஷினிகா-மாத்தறை, எஃப்.ரினோசா-கொழும்பு-10, என்.கவ்ஷிதா-சிலாபம், வீரசிங்ஹ-எலிபிட்டிய, வை.சில்வா-நுகேகொட, டீ.கொடித்துவக்கு-நம்பிலிபிட்டி, எஸ்.மல்ஷான்-பாகல இம்புல்கொட, வி.பெரேரா-சிலாபம், டி.சீவந்தி-மெட்டிகொட, என்.அப்சரா-நீர்கொழும்பு, டி.ஹதுருசிங்ஹ-மொரந்துடுவ, எஸ்.குமார-மெயிலபிடிய, ஆர்.டீ.சில்வா-நுகேகொட, எச்.ரனவீர-பதுளை, பி.ரனதுங்க-தனோவிட்ட, என்.சமந்தா-யடிகல்லோலுவ, என்.விஜேசிங்ஹ-மாத்தளை, எஃப்.நஸிமா, டீ.ஷெஷான்-ஹோமாகம, எம்.அர்ஸக்-புத்தளம், டி.செனரத்ன-பன்னல, ஐ.ராஜசிங்ஹ-எதுன்கஹகொட்டுவ, எம்.லுஷான்-பலடுவ, கே.தீலக-மஹரகம, பி.சந்ரலக்ஷான்-ரன்வெல்ல, எஃப்.ஸைனப்-வெல்லம்பிட்டி, எஸ்.தக்ஷிலா-மாளிகாவில, சி.திஸாநாயக்க-ஹிதெந்கம, டி.செவ்வந்தி-பொரலஸ்கமுவ, டீ.அதசூர்யா-ஹிடகொல்ல, சி.மதுசங்க-ரக்கஹாவில்ல, எஃப்.ரிஃபாத்-புத்தளம், எம்.இஃதாத்-திருகோணமலை, ஆர்.அமரசேகர-பூநேவ, எம்.ஷிரிக்-ரத்னபுர, என்.ஜெயரத்ன-கண்டி, எஸ்.அபேரத்ன-அங்குபுர, ஜி.நவோதனி-பயாகல, எம்.அஸ்லாம்-ஓட்டமாவடி, எம்.மின்ஸாஃப்-தர்கா நகர், ஐ.ஜமால்தீன்-வெல்லம்பிட்டி, எச்.விஜேசூர்ய-ஹிங்குல்ல, எம்.ஜெயசேகர-கடுவெல்கம, எம்.தேனுவர-காலி, ஆர்.இஸ்மாயில்-மல்வான, பி.பதிரன-மஹோ, ஆர்.விதர்ஷனா-சிலாபம், ஆர்.ரிஃபாய்-கொழும்பு-07, எல்.சோமவீர-அரநாயக, ஜி.ஹன்சிகா-ஹோமாகம, சி.இனுகா-வத்தளை, எஃப்.நஸீஹா-மாவனல்ல, ஆர்.தினுஜயா-அம்பாறை, வை.ஜயந்த-அனுராதபுரம், ஏ.ரஹ்மான்-ரத்னபுர, டீ.டேனியல்-மல்பான, ஆர்.ஜெயரத்ன-கேகாலை, பி.விக்ரமநாயக்க-கட்டுகிதுல, எம்.ஃபஷ்ரத்-புத்தளம், ஆர்.ஜயவர்தன-மாத்தறை, டி.தர்ஷிகா-குருடுகஹா, டி.எரந்த-அதிரிவெல, எம்.டி சில்வா-கட்டுகஸ்தொட, டி.வீரசிங்கஹ-மாத்தறை, வி.ஷாஸ்ஹெந்ர மீரிகம, எச்.வீரசிங்ஹ-ஹபுராகலை, எம்.ரத்நாயக-நுகவெல, பி.ஜெயகொட-கேகாலை, எஃப்.மரியம்-கம்பளை, வி.சதருவன்-கம்பளை, பி.மதுஷானி-தெல்கொட, என்.மதுஷங்க-வேவல்தெனிய, எச்.ஜினதாச-மாவத்தகம, சி.பியரத்ன-ஹங்வெல்ல, என்.சிந்தக-களுத்துறை தெற்கு, எச்.சத்சரணி-கலவான, எஸ்.இம்தியாஸ்-கொழும்பு-15, சி.மதுசங்க-பிபிலே, டி.விக்ரமரத்ன-மொரட்டுவ, டி.பண்டார-பதுளை, பி.ரத்நாயக்க-கோட்டே,எஸ்.ருஷாட்-கட்டுகஸ்தொட்ட, எம்.அக்கொட-அரனாயக்க, ஏ.வெதகே-ரத்னபுர, சி.குமாரி-வெள்ளவாய, எஸ்.ப்ரேமகுமார-கண்டி, ஜே.ஜயலத்-மீரிகம, ஆர்.நஸ்வாம்-கொலன்னாவ, ஏ.உரகொட-கொடுகத,எஸ்.பெர்னான்டோ-வென்னப்புவ, எச்.வீரசிங்ஹ-பதுரலிய,டீ.ஜெயவர்தன-நெலுந்தெனிர, எஃப்.அஹமட்-வெலம்பொட,எஸ்.அதிகாரம்-மாத்தளை, எச்.ஹன்சனி-மிஹிந்தல, டீ.கல்ஹாரா-தெனிபிடிய, எம்.அஸார்ட்-எஹலியகொட,டீ.பெரேரா-ஹோகாந்தர, எஸ்.பிரியங்கர-பசறை, டி.களுதாந்தி-பூருவதந்த, எம்.வணிகசூர்ய-எல்ல,எம்.சமரக்கோன்-குருணாகலை, வை.இஹாரிக்-சீதுவ, கே.பாக்யா-நேபட, ஏ.அஸிஸ்-என்னல, ஜே.சுபோதா-சியபலபே வடக்கு, எஸ்.முதுகுமாரன-காலி, டீ.கவிந்யா-மொனராகலை, ஏ.தர்ஷாந்த்-களுவாஞ்சிக்குடி, எம்.ஜெயகாந்தன்-வவுனியா, எஸ்.யதிகுலராஜா, மட்டக்களப்பு.

(மிகுதி அடுத்த வாரம்)

# கோப்பி பருகினால் நோய்கள் நீங்கும்!







இலங்கை வரலாற்றில் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின் ஆரம்பகாலம் 19 ஆம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியாகும். இக்காலகட்டத்தில் முதன்முதலாக கோப்பிப் பயிர்ச்செய்கையே மேற்கொள்ளப்பட்டது. இன்று மத்திய மலைநாட்டில் தேயிலைத் தோட்டங்கள் இருப்பது போல் ஆரம்ப காலகட்டத்தில் இருக்கவில்லை. மாறாக, கோப்பித் தோட்டங்களே எங்கும் காணப்பட்டன. ஆனால், பின்னர் கோப்பிப் பயிரில் ஏற்பட்ட ஒருவித நோயின் காரணமாக, கோப்பிப் பயிர்ச்செய்கை அழியத் தொடங்கியது. அதற்குப் பதிலாக தேயிலை பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டது. எனினும், கோப்பிச் செய்கை முற்றாக நிறுத்தப்படவில்லை. சிறியளவில் அதன் பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டே வந்தன. அவ்வாறே, கோப்பிப் பானத்தை பலரும் விரும்பி அருந்தி வந்தனர். எனவே, இது கோப்பி பருகுவோருக்கான ஒரு மகிழ்ச்சியான விடயமாகவும் அமையும்.

நாளொன்றுக்கு பல தடவைகள் கோப்பி அருந்துவதால் நடுத்தர வயதில் பல்வேறு நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் குறை வதாக,அது குறித்து ஆய்வுகளை மேற்கொண்ட சுவீடன் நாட்டு ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நடுத்தர வயதைத் தாண்டுபவர்கள் நாளொன்றுக்கு மூன்று அல்லது ஐந்து கோப்பை கள் கோப்பி அருந்தினால் மன அழுத்தம், மந்த நிலை, Alzheimer (எல்சீமர்-மறதி நிலை, பேச்சாற்றல் குறைவு போன்ற தாக்கங்களை ஏற்படுத்தும் நோய்) போன்ற நோய்களுக்கு ஆளாவது 60 முதல் 65 சதவீதம் வரை குறைவடையும் என ஆய்வுக் குழு சுட்டிக்காட்டியுள்ளது. இதற்காக இரண்டு பிரதேசங்களில் இருந்து 1409 பேரை மேற்படி ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளனர்.

## ஞாபகசக்தி அதிகரித்தல்

இவ் ஆய்வுகளின் மூலம் கோப்பி அதிகம் அருந்துவதை வழக்கமாகக் கொண்டவர்களுக்கு ஞாபகசக்தி அதிகரிப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. மேலும், கோப்பியில் உள்ள கெஃபெய்ன் எனும் ஊக்கி உடல் செயற்பாடுகளை விரைவாக இயங்கச் செய்யக்கூடியது. இதுவே Alzheimer நோயைக் கட்டுப்படுத்த உதவுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இதர பல நோய்களுக்கு நிவாரணம்

கோப்பி அருந்துவதன் மூலம் மந்தநிலைக் குறைபாடு தீர்வதோடு, நரம்புத்தொகுதியில் ஏற்படும் பல்வேறு கோளாறுகளையும் இருதய நோய்களையும் ‘சிரோசிஸ்’ எனும் நோயையும் நீரிழிவையும் கட்டுப்படுத்தக்கூடியதாக இருக்கும் எனவும் ஆய்வின்போது தெரிய வந்துள்ளது.

**ஆர். ஜே.**

## 2008 தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



**தி/கிண்ணியா மத்திய கல்லூரியில் 2008 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களான (இடமிருந்து வலமாக) ஆதிப் (141), எஸ்.ரைஹான் (140), எம்.ஆர்.ரக்ஸான் (130), ஏ.ஜீ.அப்ரார் (117) ஆகியோர் ஆசிரியர் எஸ்.மணிவதனன் உடன் படத்தில் காணப்படுகின்றனர்.**

*(தகவல்: ந.மு.றுஸ்மில், கிண்ணியா-05)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணினியின் தந்தை அலன் டியுரின்

**நவீன உலகில் இன்றியமையாத உபகரணமாக கணினி அமைந்துள்ளது. இந்த கணினியின் வரலாறு இரண்டாம் உலகப் போர் காலப்பகுதி வரை பரந்து விரிகின்றது. நவீன கணினி தொழில் நுட்பத்தின் ஆரம்பகர்த்தாவாக அலன் டியுரின் என்ற விஞ்ஞானி கருதப்படுகின்றார். அவரே நவீன உலக கணினியின் தந்தையாகவும் கருதப்படுகின்றார்.**

## சிறுபராயம்

அலன் மேத்திகன் டியுரின் 1912 ஜூன் 7 ஆம் திகதி இங்கிலாந்தில் பிறந்தார். அவரது தந்தையான ஜூலியஸ் மெத்திசன் டியுரின் இந்திய சிவில் சேவையில் உயர்மட்ட அதிகாரியாக கடமையாற்றியவராவார். அலனின் சிறுபராயம் இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் இடையிலான சஞ்சாரங்களின் நினைவுகளினால் நிரம்பியிருந்தது. அவர் சிறு வயது முதலே கல்வியில் அதிக ஆர்வம் கொண்டிருந்தார்.

அலன் தனது ஆரம்பக் கல்வியை புனித மேரி மற்றும் ஷேர்போர்ன் (Sherborne) பாடசாலைகளில் கற்றுக் கொண்டார். கணித பாடத்தில் அதிக ஆர்வம் கொண்ட அவர், Calculus போன்ற கடினமான கணித முறைகள் பற்றிய அறிமுகம் மற்றும் அடிப்படைகள் இன்றி அவற்றைப் பயன்படுத்தி கணிதச் சிக்கல்களை தீர்த்துக் கொண்டார். அப்பொழுது அவருக்கு பதினாறு வயது மட்டுமே. எனினும், இலக்கிய விடயங்கள் குறித்து அவரது ஆர்வம் குறைவாகவே இருந்தது. இதனால், கேம்பிறிஜ் டிரினிட் பல்கலைக்கழகத்தின் புலமைப்பரிசிலினை பெற்றுக் கொள்ள அவர் தவறினார்.

## பல்கலைக்கழக வாழ்க்கை

எவ்வாறாயினும், கேம்பிறிஜ் பல்கலைக் கழகத்தின் கிங்ஸ் கொலேஜுக்கு அவர் தெரிவானார். 1931-1934 காலப்பகுதியில் அவர் மிக அக்கறையுடன் கல்வி செயற்பாடுகளில் ஈடுபட்டதனால் அதி திறமை சித்திகளுடன் பட்டம் பெற்றார். இந்தக் காலப்பகுதியில் டியுரின் இயந்திரம் (Turin Machine) என்று கூறப்படும் எளிய உபகரணம் ஒன்றினை அறிமுகப்படுத்த அவரால் முடிந்தது. 1937 முதல் 1938 வரையிலான காலப்பகுதியில் பிரின்ஸ்டன் பல்கலைக் கழகத்தில் கலாநிதிப் பட்டத்திற்கான கற்கைப் பணிகளில் அவர் ஈடுபட்டார். அதன்பின்னர் மீண்டும் கேம்பிறிஜ் சென்றார்.

## ரகசிய சமிக்ஞை கற்கை

இரண்டாவது உலகப் போர் காலப்பகுதியில் டியுரின் ரகசிய சங்கேத மொழிகளை எழுதுபவராக தனது பங்களிப்பினை நாட்டிற்கு பெற்றுக் கொடுத்தார். 1938 இல் ரகசிய சங்கேத மொழிகள் பற்றிய கற்கைப் பணிகளில் அவர் ஈடுபட்டார்.





## கணிதச் சிக்கல்களைத் தீர்த்து வைக்கும் இயந்திரம்

கணிதச் சிக்கல்களைத் தீர்த்து வைக்கும் பொம்பே (Bambe) எனும் இயந்திரத்தினை அவர் தயாரித்தமையும் ஒரு சிறப்பம்சமாகும். இரண்டாம் உலகப்போர் காலப்பகுதியில் இந்த இயந்திரங்கள் 200 வரை உலகம் முழுவதும் பயன்படுத்தப்பட்டன. போர்க் காலத்தில் அவர் இங்கிலாந்து நாட்டிற்காக ஆற்றிய சேவைகளுக்காக 'OBE' (ஒபே) என்ற கௌரவ அந்தஸ்தும் வழங்கப்பட்டது.



எலன் டியுரின்





## புத்தி இயந்திர விஞ்ஞானம்

போரின் பின்னர் Artificial Inteligence எனப்படும் சிந்தனைத் திறன்மிக்க இயந்திரங்களை உருவாக்குவதில் அவதானம் கொண்டார். இதன் வாயிலாக இயந்திரம் ஒன்று புத்திசாதூரியம் மிக்கதா? என்பது பற்றி அறியும் முறை குறித்து அவர் உலகுக்கு அறிமுகப்படுத்தினார். இது Turing test என்ற பெயரில் பிரபல்யம் பெற்றது.

## இறுதிக்காலம்

1952 ஆம் ஆண்டு தொடக்கம் இறக்கும் வரை இவர் விஞ்ஞான தொழில்நுட்மயமான உயிரியல் விஞ்ஞானத்துறை பற்றி பல ஆய்வுகளை மேற்கொண்டார். தனது வாழ்வின் இறுதிக் காலப்பகுதியில் இப்பணிகளில் ஈடுபட்டதற்கான விருது அவருக்கு கிடைத்தது. கணினி விஞ்ஞானம் பற்றிய பல அரிய ஆய்வுகளை மேற்கொண்டு உலகுக்கு அளித்த இந்த விஞ்ஞானி 1954 இல் 'சயனைட்' உள்ளடக்கப்பட்ட ஆப்பிள் பழத்தை உட்கொண்டு தற்கொலை செய்து கொண்டார்.

## இறப்பின் பின்னரான வரவேற்பு

1966 முதல் கணினி விஞ்ஞானம் குறித்த அரிய கண்டுபிடிப்புகளை மேற்கொண்ட அலன் டியுரியை கௌரவிக்குமுகமாக டியுரின் விருது வழங்க Association for Computing Machinery என்ற அமைப்பு நடவடிக்கை எடுத்தமையும் நினைவு கூரத்தக்கது. இந்த விருது நொபேல் பரிசுக்கு ஒப்பானதாகும். மேலும் 1994 இல் இங்கிலாந்தின் மென்சஸ்ட்டர் நகரத்தின் ஒரு பாதைக்கு அலன் டியுரின் என்ற பெயர் சூட்டப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. 2004 ஜூன் 7 ஆம் திகதி டியுரின் வசித்து வந்த வீட்டின் அண்மையில் நினைவுத்தூபி ஒன்றும் அமைக்கப்பட்டது.

மேலும், 2004 ஒக்டோபர் 28 ஆம் திகதி பிரிட்டனின் 'சரே'பல்கலைக்கழகத்தில் டியுரினின் சிலை ஒன்றும் நிறுவப்பட்டது. அத்தோடு, 'பியுட்டோரிக்கோ' பல்கலைக் கழகத்தின் கணினி விஞ்ஞான கூடமும் டியுரின் என்ற பெயரால் அழைக்கப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.



கணிணித் துறையில் இத்தனை முக்கியத்துவம் மிக்க அலன் டியுரின் நாமம் எப்போதும் நினைவுகூரப் பட்டுக் கொண்டே இருக்கும் என்பது திண்ணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| தலைநகர் | : பஞ்ஜுல் |
| பெரிய நகரம் | : செரெகுண்டா |
| அரச கருமமொழி | : ஆங்கிலம், மந்திங்கா |
| அரசு | : குடியரசு |
| ஜனாதிபதி | : யாஹ்யா ஏ.ஜே.ஜே.ஜெமே |
| மொத்த நிலப்பரப்பு | : 10,380 சதுரகிலோமீற்றர் (இதில் 11.5% நன்னீர்) |
| மொத்த சனத்தொகை | : 1,700,000 |
| நாணயம் | : டெலாசி |
| காலம் | : கிரீன்வீச் நேரம் |
| இணையத்தளக் குறியீடு | : .gm |
| சர்வதேச தொலைபேசி இலக்கம் | : +220 |






## அமைவிடமும் தரைத்தோற்றமும்

கெம்பியா குடியரசு மேற்கு ஆபிரிக்காவில் உள்ள மிகச்சிறிய நாடுகளில் ஒன்றாகும். கெம்பியா நதியின் இரு கரைகளிலும் அமைந்த இந்த நாடு, ஆபிரிக்க மல்யுத்தத்திற்கு பெயர் பெற்றது. வடக்கு, கிழக்கு மற்றும் தென் பகுதிகள் செனெகல் நாட்டால் சூழப்பட்டுள்ளது. மேற்கில் அட்லாண்டிக் சமுத்திரம் அமைந்துள்ளது.

கெம்பியா 5 வலயங்களையும் ஒரு நகரத்தையும் கொண்டுள்ளது. இந்த 5 வலயங்களும் 37 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. மிகச் சிறிய மற்றும் ஒடுங்கிய நில அமைப்பைக் கொண்ட இந்நாடு, கெம்பியா நதியால் இரு பிரதேசங்களாகப் பிளவுபட்டுள்ளது. கெம்பியாவில் பொதுவாக வறண்ட கால நிலையே நிலவுகின்றது.

## மக்கள்

மந்திங்கா, ஃபுலா, வொலோஃப், ஜோலா, செராஹுவுலி ஆகிய ஆபிரிக்க கோத்திரவாசிகளை 99% மாகக் கொண்ட இந்நாட்டில் மிகச் சிறிய அளவில் ஏனைய கண்டங்களைச் சேர்ந்த மக்களும் வாழ்கின்றனர்.

பெரும்பான்மையோரின் மதமாக இஸ்லாமிய மதம் திகழ்வதோடு, கிறிஸ்தவர்களும் சுதேச ஆபிரிக்க மத நம்பிக்கையாளர்களும் சிறுபான்மையினராக வாழ்கின்றனர்.



## வரலாறு

கி.மு 9 ஆம் மற்றும் 10 ஆம் நூற்றாண்டுகளில் அரேபிய வர்த்தகர்களால் கெம்பியா குறித்த முழுமையான விபரங்கள் திரட்டப்பட்டிருந்தன. 10 ஆம் நூற்றாண்டில் இஸ்லாமிய வர்த்தகர்களும் 'பதி' இனத்தவர்களும் மேற்கு ஆபிரிக்காவில் வர்த்தக சமூகங்கள் பலவற்றைக் கட்டி எழுப்பினர். 11 ஆம் மற்றும் 12 ஆம் நூற்றாண்டுகளில் இவ்வாறு கட்டியெழுப்பப்பட்ட ராசதானிகள் இஸ்லாமிய ராட்சியங்களாக மாறின. 13 ஆம் நூற்றாண்டில் இன்று கெம்பியா என அழைக்கப்படும் இப்பிரதேசத்தினுள் வொலோஃப், மந்திங்கா, ஃபுலா ஆகிய கோத்திரவாசிகள் குடியேறத் தொடங்கினர்.

14 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இப்பிரதேசம் மாலிப்பேரரசின் ஒரு பகுதியானது. 14 ஆம் நூற்றாண்டின் மத்திய காலகட்டத்தில் போர்த்துக்கேயர்கள் இப்பிரதேசத்திற்கு கடல் மார்க்கமாக உட்பிரவேசித்து, வர்த்தகத்தை அபிவிருத்தி செய்தனர். 17 ஆம் நூற்றாண்டில் கெம்பியாவினுள் பல்வேறு ஆங்கில வர்த்தக சங்கங்கள் தாபிக்கப்பட்டன. 1807 இல் அடிமை வியாபாரம் ரத்துச் செய்யப்படும் வரை இங்கு இலாபம் தரக்கூடிய பிரதான மூல வருமானமாக அடிமை வியாபாரம் தொடர்ந்து நடைபெற்றது.

பின்னர், 1843 இல் கெம்பியா பிரித்தானிய குடியேற்ற நாடாகியதுடன், 1965 பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி சுதந்திரமடைந்து, பொதுநலவாய நாடுகளின் அமைப்பில் அங்கத்துவத்தைப் பெற்றது. அதன்பின், 1970 ஆம் ஆண்டு அது முழுமையான தன்னாட்சி நாடாக பரிணமித்து, குடியரசாக உருவாகி அதன் ஜனாதிபதியாக 'டாவுடா காய்ரபா ஜவாரா' தெரிவு செய்யப்பட்டார்.




















## பொருளாதாரம்

உலகில் மிக வறுமையான நாடுகளில் ஒன்றாகிய கெம்பியா, அதிகளவில் வெளிநாட்டு உதவிகளையே நம்பியுள்ளது. வர்த்தகத்தை மையமாகக் கொண்ட இந்நாட்டின் பொருளாதாரமானது வரையறுக்கப்பட்ட விவசாயத்தைக் கொண்டதாக இருக்கின்றது.

நாட்டின் மொத்த சனத்தொகையில் 75% மானோர் விவசாய மற்றும் கால்நடை வளர்ப்பில் ஈடுபடுகின்றனர். அவர்கள் நிலக்கடலையை ஏற்றுமதி செய்வதோடு, அதன் உப உற்பத்திப் பொருட்களையும் ஏற்றுமதி செய்கின்றனர். வெளிநாடுகளில் இருந்து கொண்டுவரப்படும் பொருட்களை மீண்டும் ஏனைய ஆபிரிக்க நாடுகளுக்கு மீள் ஏற்றுமதி செய்வதையும் தமது பொருளாதார நடவடிக்கைகளாகக் கொண்டுள்ளனர்.

விவசாயத்தில் முக்கிய விளைபொருளாக அரிசி, தினை, சோளம், மரவள்ளி என்பன திகழ்வதோடு, கோழி, ஆடு, செம்மறியாடு வளர்ப்பிலும் ஈடுபடுகின்றனர். அவர்களின் பொருளாதாரத்தில் மீன்பிடித்தொழிலும் கணிசமான பங்கை வகிக்கின்றது. கைத்தொழில் துறையில் விவசாய உற்பத்திகள், சிறு பொருள் உற்பத்திகளில் ஈடுபடும் கெம்பியா, இந்தியா, பிரித்தானியா, சீனா மற்றும் செனெகல் ஆகிய நாடுகளுடன் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் வாழும் உலகம் புதுமையானது. மர்மங்கள் நிறைந்தது. இத்தகைய மர்ம விடயங்கள் சம்பந்தமான பல்வேறு தகவல்களை, அதன் விஞ்ஞான பின்புலத்தை நாம் அறிந்து கொள்வது காலத்தின் கட்டாயமாகும்

# மூர்க்கமான 'பொட்மின்' கரும்பூனை



## ஏரிக்கரையில் நடமாடும் மிருகம்

1983 ஆம் ஆண்டு முதல் ஐக்கிய ராச்சிய மக்களை அச்சத்தில் ஆழ்த்துகின்ற, பண்ணைகளில் வாழும் மிருகங்களைத் தாக்கி வருகின்ற மர்மமான மிருகம் பற்றிய தகவல்கள் ஐக்கிய ராச்சியத்தின் கோன்வெல் பிரதேசத்தில் இருந்து கிடைக்கப் பெற்றுள்ளன.

தோற்றத்தில் இம்மிருகமானது பெரியதொரு பூனையைப் போன்று காட்சியளிக்கும். இந்த விலங்கினத்தை 'மூர்க்க பொட்மின் கரும்பூனை' அல்லது 'கோன்வெல் மூர்க்கன்' என்று அழைக்கின்றனர். எங்கும் சதுப்பு நிலமாக இருக்கும் கோன்வெல் பிராந்தியத்தின் பனியால் மூடிய ஈரழிப்பு நிறைந்த-இருள் சூழ்ந்த ஏரிக்கரையில் இந்தப் பெரிய கரும்பூனை நடமாடுவதைக் கண்டுள்ளமைக்கான பல சாட்சியங்கள் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டுள்ளன.


புகைப்படக் கருவியினால் பிடிக்கப்பட்ட கரும் பூனையின் படம்

## கண்டெடுக்கப்பட்ட மண்டையோடு

1996 இல் ஏரிக்கரை சதுப்பு நிலப் பகுதியினூடாக நடந்து சென்ற இளைஞன் ஒருவனுக்கு அங்கிருந்து மண்டை ஓடு ஒன்று கிடைத்தது. அந்த மண்டை ஓட்டில் நீண்ட-கூர்மையான இரு பற்கள் காணப்பட்டன. இந்தக் கண்டுபிடிப்போடு, பொட்மின் கரும்பூனை மென்மேலும் உலகப் பிரசித்தி பெறத் தொடங்கியது. அதனையடுத்து பலரும் இது குறித்த தகவல்களைத் திரட்டலாயினர்.

## மண்டையோட்டை ஆராய்தல்

இது தொடர்பில் மென்மேலும் ஆராய்ந்தறியும் நோக்கில் கண்டெடுக்கப்பட்ட கரும்பூனையின் மண்டையோடு லண்டன் மாநகரில் அமைந்துள்ள இயற்கை விஞ்ஞான நூதனசாலையில் வைக்கப்பட்டது. நாளடைவில் இது பொட்மின் மிருகம் குறித்து பிரசாரத்தை பெற்றுக்கொள்வதற்காக ஒரு சிலரால் புலியின் மண்டையோட்டில் கூரான இரு பற்களைப் பொருத்தி வீசப்பட்ட மண்டையோடு எனத் தெரியவந்தது.

1996 இல் கண்டுபிடிக்கப்பட்ட இந்த மண்டையோடு போலியானதாக இருந்தாலும் தோற்றத்தில் பெரிய- கறுப்பு நிறம் கொண்ட-பூனை இனத்தைச் சேர்ந்த மிருக இனமொன்று சதுப்பு நிலங்களை அண்டிய பகுதிகளில் வாழ்வதோடு, அவை பிரதேச மக்களை பயமுறுத்தியபடி, பண்ணைகளில் உள்ள மிருகங்களை இரையாக்கி, இன்றும் வாழ்கின்றன என்றும் கூறப்படுகின்றது.


ஏரிக்கரையில் காணப்பட்ட பாதச்சுவடு


கிடைக்கப்பெற்ற மண்டையோடு
5cm

## க்ரிப்டோசூலொஜி

'க்ரிப்டோசூலொஜி' (Cryptozoology) என்பது அந்தரங்க விலங்கியல் விஞ்ஞானமாகும். 'க்ரிப்டோ' எனும் ஆங்கிலச் சொல்லானது தமிழில் 'அந்தரங்கம்' அல்லது 'மறைந்த' என அர்த்தப்படுகின்றது. 'சூலோஜி' என்றால் விலங்கியல் விஞ்ஞானமாகும். 'அந்தரங்க விலங்கியல்' எனக் கருதப்படுவது சாதாரண விலங்கியல் விஞ்ஞான விதிமுறைகளுக்குப் பொருந்தாததாகும். அந்தரங்க மிருக விஞ்ஞான ஆராய்வுகளை இரு காரணங்களுக்காக மேற்கொள்கின்றனர். அவையாவன;

1. கண்டெடுக்கப்பட்ட உடல் எச்சங்களின் அடிப்படையில் அழிந்து போனதாகக் கருதப்பட்ட பல உயிரினங்கள் இன்னும் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றனவா? எனக் கண்டறிவது இவ் ஆய்வின் ஒரு நோக்கமாகும்.

2. ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றுகள் இல்லாத காரணத்தினால் சில மிருகங்களை வகைப்படுத்த முடியாததாக இருப்பினும் வாய்மொழிக்கதைகள், புராணக்கதைகளில் அவ்வாறான மர்ம மிருகங்கள் பற்றிக் கூறுமிடத்து, அவ்வாறான விலங்குகள் வாழ்ந்திருக்கலாமா? என ஆராய்வது இரண்டாவது நோக்கமாகும்.

## தமிழிலும் முடியும்

மருத்துவம் போன்ற கல்வியை தமிழில் கற்பிக்க முடியுமா? என்ற கேள்வியை கேட்பவர்கள் பலர் இன்றும் நம் மத்தியில் காணப்படுகின்றனர்.ஆனால்,இதற்கு'முடியும்' என்றே பதில் கூறவேண்டும்.

ஆங்கில மருத்துவத்தைத் தமிழில் தாராளமாகக் கற்றுத்தர முடியும் என ஏறக்குறைய 150 ஆண்டுகளுக்கு முன்பே நிரூபித்தவர்தான் சாமுவேல் ஃபிஸ்க் க்ரீன் என்பவர்.



ஐக்கிய அமெரிக்காவில் பிறந்த வெள்ளையரான இவர், 1864 இல் இலங்கையில் வட மாகாணத்தில் குறிப்பாக, யாழ்ப்பாணத்தில் தமிழர்களுக்கு தமிழிலேயே ஆங்கில வைத்தியத்தைச் சொல்லிக் கொடுத்து சாதனை புரிந்தார். அத்துடன், 1864 இல் யாழ்ப்பாணம், மானிப்பாயில் இவர் 'க்ரீன் ஞாபகார்த்த வைத்தியசாலை'யையும் நிறுவினார். 'அனாடமி' எனும் புத்தகத்தை 'அங்காதிபாதம்' என்ற பெயரில் 1852 இல் இவர் வெளியிட்டார். அத்துடன், மருத்துவக் கலைச்சொல் அகராதி ஒன்றையும் இவர் தயாரித்தார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆக, இவரது வழிகாட்டலின்படி மருத்துவக் கல்வியை தமிழிலும் கற்பிக்கமுடியும் என்பது நிரூபணமாகின்றது.

ஜே.ஏ.விபாகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீ விபத்தின்போது உதவி

**'நெருப்பு' எமக்கு அத்தியாவசியமானது. எனினும், தேவைகளின்போது உதவும் தீ எமக்கு விபத்துக்களை ஏற்படுத்திவிடும் சந்தர்ப்பங்களும் உள்ளன. இது குறுகிய கால இடைவெளிக்குள் அனைத்தையும் சாம்பலாக்கி விடக்கூடியது. எனினும், அவதானமாகவும் பாதுகாப்பாகவும் செயற்படுமிடத்து, தீ விபத்துக்களிலிருந்து தப்பித்துக் கொள்ளமுடியும். ஆனால், சில சந்தர்ப்பங்களில் பரவலாக ஏற்படக்கூடிய தீயினை நம்மால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியாமல் இருக்கும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் தீயணைப்புப் படையினரே நம் நினைவுக்கு வருகின்றனர்**

## தீயணைப்புப் படையின் ஆரம்பம்

பிரித்தானிய காப்புறுதி நிறுவனம் ஒன்றினாலேயே உலகில் முதல் தீயணைப்புப் படை உருவாக்கப்பட்டது. அது 1772 ஆம் ஆண்டிலாகும்.எனினும்,தீயணைப்பு சேவை 1833 ஆம் ஆண்டளவிலேயே உலகம் முழுவதும் பிரசித்தி பெற்றது. 1833 ஆம் ஆண்டு லண்டன் நகர அதிகாரிகள் ஒன்றிணைந்து தீயணைப்புப் படையொன்றினை ஸ்தாபித்தனர்.

அவ்வாறே, இலங்கையின் தீயணைப்புப் படை வரலாறு மிக நீண்டதாகும். 1890 களில் கொழும்பு இலங்கையின் பிரதான வர்த்தக மையமாகத் திகழ்ந்தது. அன்றைய காலகட்டத்தில் தரகர்களினால் கொழும்பு நகரில் வசித்து வந்த வணிகர்களின் பொருட்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்ட சம்பவங்கள் அடிக்கடி நடந்து வந்தன. இதுவே பெரும் சிக்கலாகவும் இருந்தது. அதற்கு முகம் கொடுக்கும் முகமாக தீயணைக்கும் தொண்டர் படையொன்று அமைக்கப்பட்டது. பின்னர் 1892 இல் கொழும்பு கோட்டையில் தீயணைப்புப் படைப்பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. தற்பொழுது, அப்பிரிவு 'தீயணைப்பு மற்றும் உயிர் காக்கும் திணைக்களம்' என அழைக்கப்படுகின்றது. எவ்வாறாயினும், பொதுவாக 'தீயணைப்புப் படை' என்ற சொல்லே தற்போது வழக்கில் உள்ளது.

## தீயணைப்பு மற்றும் உயிர் காக்கும் திணைக்களம்

இந்த திணைக்களம் கொழும்பு நகர சபையின் நிர்வாகத்தின்கீழ் உள்ளது. இதன் தலைமையகம் கொழும்பு -10, டி.பி.ஜாயா மாவத்தையில் அமைந்துள்ளது. தவிர, கிரேண்ட்பாஸ், கொட்டாஞ்சேனை மற்றும் கோட்டைப் பகுதிகளிலும் நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியின் அண்மையிலும் இதன் கிளைகள் அமைந்துள்ளன.

## சேவை

தீயினால் பாதிக்கப்படும் மக்களைப் பாதுகாப்பதே இந்த திணைக்களத்தின் முக்கிய பணியாகும். தீயினால் சொத்துக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களைக் குறைத்துக் கொள்ளல் பற்றி அடுத்தபடியாக சிந்திக்கப்படுகின்றது. தமது உயிரைப் பாதுகாத்து, பிற உயிர்களையும் காத்துக் கொண்டு தீயணைப்புப் படையினர் கடமையாற்றுகின்றனர். இதனைத் தவிர, வாகன விபத்துக்கள்,


கட்டுப்பாட்டறை

கிணறு மற்றும் இதர ஆழமான பகுதிகளில் விழுந்தவர்களைக் காப்பாற்றல், கட்டடங்கள் உடைந்து விழும்போது, மின் தூக்கிகளில் சிறைப்படும்போது உயிர்களைக் காப்பாற்றுவதிலும் தீயணைப்புப் படை வீரர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

## முற்காப்பு நடவடிக்கைகள்

கொழும்பு நகர சபைக்குரிய பகுதிகளில் அமைக்கப்படும் ஹோட்டல்கள், தொழிற்சாலைகள், அலுவலகங்கள், வீட்டுத் தொகுதிகள் ஆகிய கட்டடங்களை நிர்மாணிக்கும்போது பின்பற்ற வேண்டிய முற்காப்பு நடவடிக்கைகள் குறித்து தீயணைப்புப் படை சில ஆலோசனைகளை முன்வைத்துள்ளது. ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் கட்டடத்தினுள் தீ விபத்து ஏற்பட்டால், அங்குள்ளவர்களின் உயிர்களைப் பாதுகாக்கக்கூடிய சுற்றுப்புறச் சூழல்களை அமைத்துக் கொள்வதே இதன் நோக்கமாகும்.

## தீ விபத்துக்கள் பற்றிய தகவல்களை அளித்தல்

திணைக்களத்திற்கு வரும் தொலைபேசி அழைப்புகள் அதன் கட்டுப்பாட்டு அறைக்கே கிடைக்கின்றன. தீ விபத்து பற்றிய தகவல்கள் வழங்கப்படும்பொழுது தகவல் அளிப்பவரின் பெயர், விபத்து நிகழும் இடம், அதன் முகவரி, விபத்தின் தன்மை, அந்த இடத்தினை வந்தடைவதற்கான குறுகிய பாதை என்பன பற்றிய தகவல்கள் பெறப்படுகின்றன. கிடைத்த தொலைபேசி இலக்கத்தினை மீண்டும் தொடர்பு கொண்டு சம்பவத்தினை மீள உறுதிப்படுத்திக் கொண்ட பின்னரே தீயணைப்புப் படையினர் சம்பவம் நடைபெறும் இடத்திற்கு அனுப்பப்படுவர்.

இந்த சம்பவம் குறித்து அண்மையில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கும் கொழும்பு பொது வைத்தியசாலைக்கும் தகவல் வழங்கப்படும். தொலைத்தொடர்பு கருவியின் ஊடாக படையினருடன் கட்டுப்பாட்டு அறை தொடர்புகளைப் பேணிக் கொண்டிருக்கும். அதன் ஊடாக பயண வழி, அப்பொழுது செயற்பட வேண்டிய முறை, தீயின் தீவிரத்தன்மை



தீயணைப்புப் படையினரின் பொதுவான சீருடை

தீயினூடாகப் பயணிக்க உதவும் சீருடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...விக்கு வரும் படை

என்பன பற்றி தீயணைப்புப் படையினருக்கு அறிவுறுத்தப்படும். கொழும்பு நகரில் நடைபெறும் பாரியளவிலான தீ விபத்து குறித்தான விபரங்கள் நகர சபையின் ஆணையாளருக்கும் மேயருக்கும் கட்டுப்பாட்டு அறையின் ஊடாக உடனுக்குடன் அறிவிக்கப்படும்.

## தீயணைப்புப் படை தீ விபத்தின்போது செயற்படும் முறை

தீயணைப்புப் படையின் பொறுப்பாளர் தீயை எப்படி அணையச் செய்யலாம் என்பது குறித்தான விபரங்களை ஏனைய வீரர்களுக்கு வழங்குவார். குறிப்பாக அந்தத் தீ எந்த வகைக்குரியது என்பது குறித்து அறியப்பட வேண்டும். ஏனெனில், ஒவ்வொரு வகைக்குரிய தீயை அணைக்கவும் வெவ்வேறு வழிவகைகள் கைக்கொள்ளப் படுகின்றன. தீயை அணையச் செய்யமுடியாவிட்டால் மேலதிக படையினரை வரவழைப்பது, நீரைப் பெறுவது என்பன குறித்து பொறுப்பதிகாரி தீர்மானிக்க வேண்டும்.




## தீ விபத்துக்கான காரணிகள்

மூன்று காரணிகள் இங்கு செல்வாக்கு செலுத்துகின்றன. தீப்பிடிக்கும் பொருள், ஒட்சிசன் மற்றும் வெப்பம் என்பனவே இந்த மூன்று விடயங்களுமாகும். இது 'தீ முக்கோணம்' என்று அழைக்கப்படுகின்றது. இந்த மூன்று விடயங்களும் ஒன்றாக இருக்கும் நிலையில் தீப்பற்றல் தொடர்ந்த வண்ணமிருக்கும். இந்த மூன்று விடயங்களில் ஒன்றினை அப்புறப்படுத்துவதன் ஊடாகவே தீயை அணையச் செய்யமுடியும் என்பதே தீயணைப்பின் தத்துவமாகும்.

## வீடுகளில் இடம்பெறக்கூடிய தீ விபத்துக்கள்

மின் ஒழுக்கு, சமையல் எரிவாயு ஒழுக்கு, குப்பி விளக்கு விழுதல் என்பனவற்றினால் வீடுகளில் தீ விபத்துக்கள் ஏற்படலாம். வீட்டினுள் அல்லது வேறிடத்தில் தீ பற்றிக் கொண்டால், தீ எப்படி ஏற்பட்டது என்பது குறித்தே முதலில் அறிந்து கொள்ளவேண்டும். அவ்வாறன்றி, தீ பரவுவதைத் தடுக்க முயன்றால், சில வேளைகளில் தீ தீவிரமாகப் பரவக்கூடும். உதாரணமாக, அடுப்பில் இருக்கும் எண்ணெய்ச் சட்டியில் தீப்பிடிக்கும் போது அதற்கு நீர் தெளிப்பதனால் தீ மேலும் பரவக் கூடும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் சட்டியினை மூடி விடுவதே சிறந்ததாகும். அதன்போது ஒட்சிசன் கிடைக்காமல் தீ அணைந்து விடும்.

## தீ விபத்தின் வகைகள்

இதில் நான்கு வகைகள் உள்ளன.

- **A வகை தீ - திண்மப் பொருட்கள் தீக்கிரையாதலைக் குறிக்கும்.**
  **(உ+ம் : பலகைகள், கடதாசிகள், பிளாஸ்டிக்)**
- **B வகை தீ - திரவப் பொருட்கள் தீக்கிரையாதலைக் குறிக்கும்.**
  **(உ+ம் : பெற்றோல், மண்ணெண்ணெய்)**
- **C வகை தீ - வாயு ரகங்கள் தீப்பிடித்தலைக் குறிக்கும்.**
  **(உ+ம் : சமையல் எரிவாயு)**
- **D வகை தீ - உலோகப் பொருட்கள் தீப்பிடித்தலைக் குறிக்கும்.**
  **(உ+ம் : அலுமினியம், மெக்னீசியம்)**

## சமையல் எரிவாயு ஒழுக்கினால் ஏற்படும் தீ விபத்துக்கள்

வீடுகளில் தீ விபத்து ஏற்பட இதுவும் ஒரு காரணமாகும். சமையல் எரிவாயு மணம் வெளியேறிக் கொண்டிருந்தால், வாயு ஒழுக்கு ஏற்பட்டுள்ளதாகத் தீர்மானிக்க முடியும். அப்போது வீட்டில் நெருப்பை உபயோகிக்கக் கூடாது. சமையல் எரிவாயு சமமாகப் பரவும் தன்மை கொண்டதால் சிறிய தீப்பொறிகூட பெரும் தீ விபத்துக்களை ஏற்படுத்தி விடும். வீட்டினுள் இருந்து தொலைபேசி அழைப்புக்களை எடுக்கவும் கூடாது.

இவ்வாறான நிலைமையில் எரிவாயு சிலிண்டரை காற்றோட்டம் உள்ள பகுதிக்கு எடுத்துச் செல்லுங்கள். சிலிண்டரை தரையில் படும்படி இழுத்துச் செல்வதனால் அந்த உராய்வு தீப்பற்ற உதவும். அதனால், சிலிண்டரைத் தூக்கிச் செல்ல வேண்டும் அல்லது வீட்டின் ஜன்னல், கதவுகளைத் திறந்து விட்டு காற்றோட்டம் கிடைக்குமாறு செய்யவேண்டும். சிலிண்டர் மட்டும் தீப்பிடித்தால் இரும்புத்தடியின் உதவியுடன் அதனை வீட்டிலிருந்து அப்புறப்படுத்துங்கள். சிலிண்டரின் மீது சிறிது சிறிதாக நீரை விசிறுவதனூடாக தீயை அணையச் செய்யலாம்.

## உடலில் தீப்பற்றினால்....

தீப்பற்றியவரைக் கீழே தள்ளி, உருட்டி விடுவதன் ஊடாக உடலில் பரவும் தீயினை அணையச் செய்யலாம். மாறாக, பதட்டப்பட்டு ஓடினால் தீ பரவுவது மேலும் அதிகரிக்கக்கூடும். தீப்பற்றியவரின் உடலை நீரினால் நனைக்கப்பட்ட கம்பளித் துணியினால் போர்த்துவது அவசியமாகும். மெல்லிய துணிகள் தீ பரவும் போது உடலுடன் ஒட்டி விடுவதனால் அதனைத் தவிர்ப்பது அவசியமாகும்.



தீயணைப்பு வாகனம்



உயிர்களைக் காக்கும் உபகரணங்களைக் கொண்ட தீயணைப்பு வாகனம்

## தீ விபத்து ஏற்பட்டால்

- தீ பரவிய விதம் குறித்து அறிந்து அதனைத் தடுக்க முயற்சி செய்யுங்கள்.
- தனியே தீயை அணையச் செய்யமுடியாவிட்டால் ஏனையவர்களின் உதவியினை நாடுங்கள்.
- தீ வேகமாகப் பரவினால் தீயணைப்புப் படையினருக்கு அறிவியுங்கள்.

## இலவச எம்பியுலன்ஸ் சேவை

திணைக்களத்தினால் இலவச அவசர விபத்து (எம்பியுலன்ஸ்) வாகனசேவை நடத்தப்படுகின்றது. கொழும்பு நகருக்குள் தீயினால், வாகன விபத்தினால் மற்றும் இதர விபத்துக்களினால் பாதிக்கப்படுபவர்களை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல இந்த அவசர விபத்து வாகன சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

தீயணைப்புப் படையின் முதலுதவிப் பிரிவு இந்த சேவையில் ஈடுபட்டுள்ளதனால் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வரையில் அந்த முதலுதவிக் குழு நோயாளிக்குத் தேவையான முதலுதவிகளைச் செய்யும். 110 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொண்டு, அவர்களின் சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும். இப்பிரிவு 24 மணிநேரமும் அதன் சேவையை வழங்குகின்றது.

கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு தீயணைப்புப் படையினரின் சேவையைப் பெற்றுக் கொள்ளலாம்.

2422222, 2422223, 4222222

**-பிரியதர்ஷினி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இணையம் குறித்த சில தகவல்கள்

1957 இல் உலகில் முதல் செயற்கைக்கோளான 'ஸ்புட்னிக்'கை ரஷ்யா விண்ணில் ஏவியது. இது அமெரிக்காவுக்கு அச்சத்தை ஏற்படுத்தியது. அறிவியல் துறையிலும் இராணுவத்துறையிலும் தமது மேலாண்மையை நிலைநிறுத்த வேண்டிய கட்டாயத்திற்குள்ளானது. இதற்காக ஆர்பா (ARPA) என்ற ஆராய்ச்சி நிறுவனத்தை ஏற்படுத்தியது. இந் நிறுவனம் வான்வழியாக அமெரிக்க இராணுவ மையங்களின் மீது அணு ஆயுத தாக்குதல் நடத்தப்பட்டால் அதை எப்படி எதிர்கொள்வது என்ற ஆராய்ச்சியில் இறங்கியது. அமெரிக்காவின் ஒரு பகுதியில் இருக்கும் இராணுவ மையம் தாக்கப்பட்டால், அதில் இருக்கும் முக்கிய தகவல்கள் மற்ற இராணுவ மையங்களுக்குத் தேவைப்படும். எனவே, இராணுவ மையங்களுக்கு இடையே ஒரு தொடர்பு வலையை ஏற்படுத்தி அதில் தகவல்களைப் போட்டு வைப்பது என்று முடிவெடுக்கப்பட்டு, அதற்கான முயற்சிகள் தொடங்கப்பட்டன.

சோதனை முயற்சியாக 1969 ஒக்டோபர் மாதம் இரண்டு கல்வி நிறுவனங்களில் இருக்கும் கணினிகள் தொடர்பு வலை மூலம் இணைக்கப்பட்டன. படிப்படியாக இந்த ஆராய்ச்சி முன்னேற்றமடைந்தது. அமெரிக்க இராணுவ மையங்களுக்கிடையே ஒரு முழுமையான தொடர்பு வலை ஏற்படுத்தப்பட்டது. 1990 இல் வட அமெரிக்காவில் இருக்கும் பல்கலைக்கழகங்கள் அனைத்தும் தொடர்பு வலைக்குள் கொண்டு வரப்பட்டன. இந்த தொழில்நுட்பம் ஐரோப்பிய நாடுகளிலும் பரவியது. 1990 ஆம் ஆண்டுகளுக்குப் பின் கணினித்துறையில் ஏற்பட்ட அசுர வளர்ச்சிக்குப் பின், இணையங்களை நிர்வகிக்கும் பொறுப்பை தன்னிச்சையான அமைப்புகளிடம் அமெரிக்க அரசு வழங்கியது. இதற்குப் பிறகுதான் பொதுமக்கள் பயன்பாட்டிற்கான இணையமும் இணையத்தளங்களும் உருவாகின.

டி.சோகுமார்




# இரண்டுமே ஒன்றுதான்

கந்தசாமி ஓர் ஏழை விவசாயி. ஆனாலும் அவன் தனிமனிதனல்ல. அவனக்கென்று ஒரு குடும்பம் இருந்தது. அவனுக்கு மனைவியும் மூன்று பிள்ளைகளும் இருந்தனர். அத்துடன், பன்றிக் குட்டியொன்றையும் விளைச்சல் குன்றிய தனது மரக்கறித் தோட்டத்தையும் அவன் பராமரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

மனைவி பிள்ளைகளுக்கும் பன்றிக் குட்டிக்குமாக உழைத்து உணவு கொடுக்கவேண்டிய துர்பாக்கிய நிலைக்கு கந்தசாமி ஆளானான்.



இவ்வாறு அவன் பல வருடங்கள் உழைத்து உணவு கொடுத்து தனது குடும்பத்தைக் காப்பாற்றினான். காலம் கடந்தது.

காலப்போக்கில் கந்தசாமி மரணமானான். அவனின் மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் உதவுவதற்கு யாருமில்லை. மேலும், சில காலம் சென்றதும் கந்தசாமியின் மனைவியும் மரணமடையும் நிலைக்கு வந்தாள். அப்போது அவள் தன் பிள்ளைகளிடம், ''செல்வப் புதல்வர்களே உங்கள் தந்தை இருக்கும் வரைக்கும் ஒரு குறையும் இன்றி உங்களை வளர்த்து வந்தார். ஆனால், இப்போது நீங்கள் இளைஞர்கள் நீங்கள் உழைக்கும் தருணம் இது. வீணாக விளையாட்டில் காலம் கழிக்காதீர்கள். தந்தையின் தோட்டத்தில் விளைச்சல் அதிகரிக்க கஷ்டப்பட்டு உழையுங்கள்'' என்று கூறினார். சிறிது காலத்தின் பின் கந்தசாமியின் மனைவியும் மரணமடைந்தாள்.

கந்தசாமியின் மூன்று புதல்வர்களும் சோம்பேறிகளும் முட்டாள்களும் ஆவர். எனவே, தோட்டத்தில் வேலை செய்யும் அளவுக்கு சுறுசுறுப்பு அவர்களிடம் காணப்படவில்லை. இவர்கள் மூவரும் இணைந்து ஒரு முடிவு எடுத்தனர். நம்முடனே வளர்ந்து வரும் இந்தப் பன்றியை விற்றால் நல்ல வருமானம் வரும் அந்த வருமானத்தால் சிறிது காலம் வாழலாம். பின் தோட்ட வேலைகளைப் பார்க்கலாம்'' எனத் திட்டமிட்டனர். திட்டத்தின்படி பன்றியை விற்க சந்தைக்குச் சென்றனர்.

ஆனால், பன்றி சந்தையில் இருந்த மரக்கறி வகைகள் மற்றும் உணவு வகைகளைக் கண்டு அவற்றை நாசம் செய்தது. இதனால் பலரின் கோபத்திற்குள்ளாகி வெறுப்புடன் மூவரும் வீடு திரும்பினார்கள். அந்தப் பன்றியை திட்டித் தீர்த்தனர்.

பின் மூவருமாகப் பன்றியை தோட்டத்திற்கு அழைத்துச் சென்று, ''நீ இன்று செய்த வேலைக்கு தகுந்த தண்டனையாக இன்று முழுவதும் தோட்டத்தில் எல்லா வேலைகளையும் செய்யவேண்டும். இன்று இரவு முழுவதும் தோட்டத்தைக் காவல் காக்கவும் வேண்டும்'' என்று கூறி தாங்கள் செய்யும் வேலைகளை பன்றியும் செய்யும் என எண்ணி வீடு சென்றனர்.

'குரங்கின் கையில் பூமாலை கிடைத்தது போல்' பன்றியின் கையில் மரக்கறித் தோட்டம் கிடைத்தது. இனிக் கேட்கவும் வேண்டுமா? தோட்டத்தை சின்னாபின்னமாக்கியது பன்றி.

மறுநாள் காலையில் மூவரும் தோட்டத்திற்குச் சென்றனர். தோட்டத்தின் கதியை கண்ட அவர்கள் ''ஓ''வெனக் கதறி அழத் தொடங்கினார்கள். தங்களது முட்டாள்தனத்தால் நடந்ததை நினைத்து வருந்தினர்.

தமது தந்தை ஒன்றுக்கும் உதவாத பன்றியை வளர்த்ததும் தம்மை வளர்த்ததும் ஒன்றுதான் எனப் புரிந்து கொண்ட அவர்கள் அன்றிலிருந்து புத்திசாலிகளாகவும் கடின உழைப்பாளிகளாகவும் மாறினர்.

வினோ துரைசிங்கம்

## பலகை வேண்டும்



உமையாள்புரம் சிவராமன் என்றொரு அறிஞர் இருந்தார். அவரை நண்பர் ஒருவர் விருந்துக்கு அழைத்தார். அறிஞரும் சென்றார். சாப்பாடு தரையில்தான். மடிப்புக் கலையாத வெள்ளை வேட்டி கட்டிக்கொண்டு வந்த சிவராமன் அமராமல் நின்று கொண்டே இருந்தார்.

அவர் நிற்கக் காரணம், உணவு வகைகள் எல்லாவற்றையும் ஏற்பாடு செய்த நண்பர் மறந்து போய் தரைச்சாப்பாட்டிற்கு முக்கியமான பொருளை ஏற்பாடு செய்யாததுதான்.

''ஏன் நிற்கிறீர்கள்?'' என்று தயங்கியவாறே கேட்டார் நண்பர்.

''மேசைச் சாப்பாடு என்றால் எனக்குச் சாப்பிட இரு கை போதும். தரைச்சாப்பாடு என்றால் இருகை போதாது. பல'கை' வேண்டும் என்றார். நண்பர் தன் தவறை உணர்ந்தார்.

## சிறந்த மனிதனாக வாழ...



அதிகம் பேசாதே! அடங்கி இரு.
எந்நேரமும் சிரிக்காதே!
முறையாக கல்வி கற்றுக்கொள்.
அலைந்து திரியாதே! பண்புடன் நட.
அமைதியாக இரு! அறிவைப் பெறு
மனதை ஒருமைப்படுத்திக்கொள்!
வேதம் கற்றுக்கொள்!
தேகம் பேணிக்கொள்! தூய்மையாக இரு.
பெரியோரை மதித்திடு! பெருமை காட்டாதே!
அனைவரிடமும் சினேகிதமாய் பழகு!
எந்நேரமும் சிந்தனையுடன் செயல்படு!
புறம் பேசாதே! பொறாமை கொள்ளாதே.
யாரிடமும் பலவீனத்தைக் காட்டாதே!
எப்பொழுதும் எச்சூழ்நிலையிலும் கொள்கை மாறாதே!
முயற்சித்துப் பார் முடியுமெனக் காட்டு
வாழ்த்தைப் பெறு வரவேற்கப்படுவாய்
அஞ்சாமல் விடாமுயற்சி செய்.
பொய் பேசாதே! திருடி வாழாதே!
நீயும் சிறந்த மனிதனாக வாழ்வாய்!

ஏ.என்.ரிஸ்மியா, ப/போகஹகும்புற மு.வி.த்.,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைவண்ணங்கள்

கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு


ந.தக்ஷா,
தரம் - 9,
சார்ணியா த.ம.வித்.,
கந்தேகெதர.


ஹிஸாஃபா மஜீத்,
தரம் - 11,
மஹ்மூத் மகளிர் கல்.,
கல்முனை.


எம்.ஜே.எம்.ஆதிஃப்,
தரம் - 7,
அல்-அக்ஸா தே.பா.,
கல்பிட்டி.


ச.சத்தியாஜினி தினேஷா,
தரம் - 9,
மோப்றே கல்லூரி,
கண்டி.


செ.அபிநேசிக்கா,
தரம் - 2,
விவேகானந்தா கல்.,
கொழும்பு-13.


எஸ்.சிபான்,
தரம்- 6,
நிகவெவ மு.வித்.,
நிகவெவ.


எஸ்.மனோராஜ், தரம் - 8,
சென்.லியனாட்ஸ்
த.ம.வித்,
ஹல்க்ரனோயா.


ஏ.எச்.எஃப்.ஹஸ்னா,
தரம் - 11,
அல்-அஸ்ரக் மு.ம.வித்.,
புத்தளம்.



மாய்வெல, மெல்சிரிபுரவைச் சேர்ந்த அந்நூர் இஸ்லாமிய பாலர் பாடசாலையில் நடைபெற்ற விடுகை விழாவின் போது எடுக்கப்பட்ட படங்களையே இங்கு காண்கிறீர்கள். (தகவல் : ஹஸ்மத் ஹமீத்)


திருகோணமலை, கனேஸ் லேனைச் சேர்ந்த சம்சுதீன்-ஜாரியா தம்பதியினரின் செல்வப்புதல்வன் கமூர்தீன், தனது பன்னிரெண்டாவது பிறந்தநாளை 19.02.2009 அன்று தனது இல்லத்தில் விமர்சையாகக் கொண்டாடினார். இவரை உம்மா, வாப்பா உட்பட குடும்பத்தினர் அனைவரும் அல்லாஹ்வின் அருள் பெற்று வாழ வாழ்த்துகிறார்கள்.

விஜய் 'விழா உலா'
த.பெ.எண் 2037
கொழும்பு

## விஜய் மாணவர் கழகம்


அங்.இல : 2459
எம்.ரிஃப்கான்,
தரம் - 11,
ஸாஹிரா கல்.,
கிங்தொட்டை.


அங்.இல : 2460
எம்.சப்னாஸ்,
சாதாரண தரம்,
அல்-அக்ஸா கல்.,
திருகோணமலை.


அங்.இல : 2461
எம்.பர்ஸான்,
தரம் - 8,
அறபா ம.கல்.,
வெலிகமை.


அங்.இல : 2462
ஷப்னாஸ் பானு,
தரம் - 10,
மு.ம.வித்.,
கல்பிட்டி.


அங்.இல : 2463
ஸ்ரீ.பிரவீன், தரம் - 9,
ஸ்ரீ கோணேஸ்வரா
இ.கல்.,
திருகோணமலை.


அங்.இல : 2464
எம்.ஐ.இல்ஹாம்,
தரம் - 6,
இசிபதன கல்.,
கொழும்பு.


அங்.இல : 2465
செ.சோவிகா,
தரம் - 7,
புனித திரேசா பெ.கல்.,
கிளிநொச்சி.


அங்.இல : 2466
எஃப்.றிஸ்மியா,தரம் - 6,
ஜாமியுள் அஸ்ஹர்
ம.கல்.,
உடத்தலவின்னை.


அங்.இல : 2467
ம.திவ்வியபிரணீத்,
தரம் - 8,
புனித அந்தோனியார்
ஆ.கல்., கண்டி.


அங்.இல : 2468
எம்.தஸ்லீம்,
தரம் - 11,
தேசிய பாடசாலை,
ஓட்டமாவடி.


அங்.இல : 2469
அய்மன் மெதாஸ்,
தரம் - 4,
அல்-மனார் ம.கல்.,
கல்முனை.


அங்.இல : 2470
எம்.ஆனந்தராஜா,
தரம் - 11,
அர்-ரஹ்மா மு.வித்.,
வேப்பமடு.


அங்.இல : 2471
டிலான் பிரதீப்,
தரம் - 10,
த.ம.வித்.,
தலவாக்கலை.


அங்.இல : 2472
எம்.சவ்ஃபான்,
தரம் - 7,
அல்-அஸ்ஹர் வித்.,
கல்முனை.


அங்.இல : 2473
தா.பாஸ்கரலிங்கம்,
உயர்தரம்,
பெரிய கோமரசன்குளம்
ம.வித்., வவுனியா.


அங்.இல : 2474
எம்.அஸாட்,
தரம் - 11,
ஸாஹிரா கல்.,
மாத்தளை.


அங்.இல : 2475
சம்பத் வாஸ்,
தரம் - 7,
இ.தி.த.க.பா.,
வவுனியா.


அங்.இல : 2476
எஃப்.றிஸ்னா, தரம் - 6,
அல்ஹாஜ்
ஏ.ஆர்.எம்.தாஸிம் கல்.,
காலி.


அங்.இல : 2477
பா.இரிஸா,
தரம் - 11,
வீரசிங்கம் ம.வித்.,
மீசாலை.


அங்.இல : 2478
இஜாஸ் அகமட்,
தரம் - 11,
அல்-அஸ்கர் மு.ம.வித்.,
திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන் ஆயுபோவன் வணக்கம்

இன்றைய பாடத்தில் மகேஷுக்கும் மல்லிகாவுக்கும் இடையில் நடைபெறும் இன்னும் ஒரு சிறிய உரையாடலைப் பார்ப்போம்.

கலாபூஷணம் கே.என்.டி.பீரிஸ்

**මහේෂ්:** **ඔයා හෙට දත ගලවන්න යන්නේ කීයටද?**
ஒயா ஹெட தத களவண்ண யன்னே கீயடத?
மகேஷ்: நீங்கள் நாளைக்குப் பல் பிடுங்க எத்தனை மணிக்குப் போகிறீர்கள்?

**මල්ලිකා:** **උදේ අටට විතර.**
உதே அடட விதற.
மல்லிகா: காலை எட்டு மணியளவில்.

**මහේෂ්:** **උදේ අටට යන්න එපා.**
உதே அடட யன்ன எபா.
மகேஷ்: காலை எட்டு மணிக்குப் போக வேண்டாம்.

**උදේ හයට විතර යන්න.**
உதே ஹயட விதற யன்ன.
காலை ஆறு மணியளவில் போங்க.

**හරියට සෙනඟ ඉන්නවා.**
ஹரியட செனக இன்னவா.
கூடுதலான சனம் இருக்கும்.

**පෝලිමේ ඉන්න ඕනේ.**
போலிமே இன்ன ஒணே.
வரிசையில் நிற்க வேண்டும்.

**මල්ලිකා:** **හොඳයි මහේෂ්, මම උදේ හයට යන්නම්.**
ஹொந்தய் மகேஷ், மம உதே ஹயட யன்னம்.
மல்லிகா: நல்லது மகேஷ், நான் காலை ஆறு மணிக்குப் போகிறேன்.

**කොළඹ දුම්රිය කීයටද තියෙන්නේ?**
கொளம்ப தும்ரிய கீயடத தியென்னே?
கொழும்பு புகையிரதம் எத்தனை மணிக்கு?

**මහේෂ්:** **උදේ පහට දුම්රියක් තියෙනවා.**
உதே பஹட தும்ரியக் தியெனவா.
மகேஷ்: காலை ஐந்து மணிக்கு ஒரு புகையிரதம் இருக்கிறது.

**ඒකෙන් ගියොත් උදේ හයට යන්න පුළුවන්.**
ஏகென் கியொத் உதே ஹயட்ட யன்ன புலுவன்.
அதில் போனால் காலை ஆறு மணிக்குப் போகலாம்.

**මල්ලිකා:** **හොඳයි මහේෂ්, මම ඒකේ යන්නම්.**
ஹொந்தய் மகேஷ், மம ஏகே யன்னம்.
மல்லிகா: நல்லது மகேஷ், நான் அதில் போகிறேன்.

## பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழி பெயர்க்க.**

i. நான் காலை ஆறு மணிக்குப் போகின்றேன்.
..........................................................................

ii. கொழும்பு புகையிரதம் காலை ஐந்து மணிக்கு இருக்கிறது.
..........................................................................

iii. நான் காலை எட்டு மணிக்குப் போகிறேன்.
..........................................................................






✱ **'Is'** எனும் துணை வினைச்சொல்லை (Auxiliary Verb) தனியொரு வினைச்சொல்லாகக் கையாண்டு அமைக்கப்பட்ட 'உடன்பாடு' வாக்கியங்களை 'வினா' வாக்கியங்களாக மாற்றியமைத்தல்.

(அ) He is in the shop.
அவன் கடையில் இருக்கின்றான். (உடன்பாடு)

**குறிப்பு:** மேற்படி 'உடன்பாடு' நிலையில் உள்ள வாக்கியத்தில் காணப்படுகின்ற 'is' எனும் துணை வினைச்சொல், அவ்வாக்கியத்தின் முன்னிலையில் இடம்பெறுகின்றபோது, அவ்வாக்கியம் 'வினா' வாக்கியமாக மாற்றமடைகின்றது. உதாரணத்தை இங்கே அவதானிப்போம்.

(ஆ) Is he in the shop?
அவன் கடையில் இருக்கின்றானா? (வினா)

---

✱ **இவ்வாறே ஏனைய வாக்கியங்களையும் அமைக்கலாம்.**

(அ) She is at home.
அவள் வீட்டில் இருக்கின்றாள். (உடன்பாடு)

(ஆ) Is she at home?
அவள் வீட்டில் இருக்கின்றாளா? (வினா)

(அ) It is on the roof.
அது கூரையின் மேல் இருக்கின்றது. (உடன்பாடு)

(ஆ) Is it on the roof?
அது கூரையின் மேல் இருக்கின்றதா? (வினா)

---

✱ **இவ்வாறே வேறு சில வாக்கியங்களையும் இங்கே பார்ப்போம்.**

(அ) Nimal is in the class.
நிமால் வகுப்பில் இருக்கின்றான். (உடன்பாடு)

(ஆ) Is Nimal in the class?
நிமால் வகுப்பில் இருக்கின்றானா? (வினா)

(அ) Mary is in the kitchen.
மேரி சமையலறையில் இருக்கின்றாள். (உடன்பாடு)

(ஆ) Is Mary in the kitchen?
மேரி சமையலறையில் இருக்கின்றாளா? (வினா)

---

(அ) The cat is on the tree.
அந்தப் பூனை மரத்தின் மேல் இருக்கின்றது. (உடன்பாடு)

(ஆ) Is the cat on the tree?
அந்தப் பூனை மரத்தின் மேல் இருக்கின்றதா? (வினா)

---

(அ) Your brother is at home.
உனது சகோதரன் வீட்டில் இருக்கின்றான். (உடன்பாடு)

(ஆ) Is your brother at home?
உனது சகோதரன் வீட்டில் இருக்கின்றானா? (வினா)

(அ) Your sister is in the shop.
உனது சகோதரி கடையில் இருக்கின்றாள். (உடன்பாடு)

(ஆ) Is your sister in the shop?
உனது சகோதரி கடையில் இருக்கின்றாளா? (வினா) **(தொடரும்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்லஸ்



அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

இங்கு வழங்கப்பட்டுள்ள உலக நடப்புக்கள் தொடர்பான தகவல்களிலிருந்து கேட்கப்படும் கேள்விக்கு சரியான விடை அளிப்போரில் மூவருக்குத் தலா ரூ.150/= பெறுமதியான 'அற்லஸ்' பாடசாலை உபகரணங்களை வாங்கக் கூடிய பண வவுச்சர்களைப் பரிசாக சிலோன் பென்சில் நிறுவனம் (அற்லஸ்) வழங்கும்.

## ஹிலரி கிளின்டனின் ஆசிய விஜயம்

ஆசிய நாடுகளுடன் நெருக்கமான நட்பினை வளர்க்க விரும்புவதாக அமெரிக்காவின் வெளிவிவகார அமைச்சரான ஹிலரி கிளின்டன் தெரிவித்துள்ளார்.

ஆசியாவிற்கான விஜயமொன்றை மேற்கொள்வதையொட்டியே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இந்த விஜயத்தின் போது அவர் ஜப்பான்,



தென்கொரியா, இந்தோனேஷியா, சீனா ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

குறிப்பாக சீனாவுடன் தமது உறவுகளை மேம்படுத்த விரும்புவதாகத் தெரிவித்துள்ள ஹிலரி கிளின்டன், தாம் எதிர்நோக்குகின்ற பொதுப் பிரச்சினைகளுக்கு ஒன்றிணைந்து தீர்வு காண விரும்புவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அணுவாயுதத் திட்டத்தை கைவிடுவதற்கு வடகொரியா முன்வந்தால் அந்த நாட்டுடன் நட்புறவை வளர்ப்பதற்கு அமெரிக்கா விரும்புவதாகவும் மேலும் தெரிவித்துள்ளார் ஹிலரி கிளின்டன்.

அமெரிக்காவின் வெளிவிவகார அமைச்சரொருவர் பதவியேற்று முதலாவது விஜயமாக ஆசியாவிற்கு பயணம் செய்வது அறுபது வருடங்களின் பின்னர் இதுவே முதல் தடவையாக நிகழுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.



## அமெரிக்க பொருளாதாரத்தை மீட்டெடுக்க கடனுதவி



அமெரிக்காவின் வீழ்ச்சி அடைந்து வருகின்ற பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு சில வருடங்கள் தேவைப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் முன்னணி தொழிலதிபர்கள் கலந்து கொண்ட சந்திப்பொன்றில் உரையாற்றும் போதே இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

"வீழ்ச்சி கண்டுள்ள அமெரிக்க பொருளாதாரத்தை மீட்சி பெறச் செய்வதற்கான நமது பயணத்தின் ஆரம்பக் கட்டம்தான் இது. எனவே, இப்படியான நெருக்கடி மீண்டும் ஏற்படாதவாறு இருப்பதற்கு பொருளாதாரத்துறையில் சில முக்கிய சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே, குறுகியகால, நீண்டகால முதலீடுகள் இதற்கு அவசியமாகும்" என்று ஜனாதிபதி ஒபாமா மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அமெரிக்க பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்காக 79 ஆயிரம் கோடி டொலர் கடனை வழங்குவதற்கான மசோதாவிற்கு அமெரிக்க நாடாளுமன்றத்தின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## சிம்பாப்வே பிரதமராக எதிர்க்கட்சித் தலைவர்

சிம்பாப்வே ஜனாதிபதி ரொபர்ட் முகாபேக்கும் அந்நாட்டின் எதிர்க்கட்சித் தலைவருக்கும் இடையே மாதக்கணக்கில் நிலவி வந்த சர்ச்சை முடிவிற்கு வந்துள்ளமையினால் இரண்டு பேரும் சமத்துவத்துடன் அதிகாரங்களைப் பகிர்ந்து அமைதியான அரசாட்சியொன்றை நடத்துவதற்கு இணங்கியுள்ளனர்.

இதன்படி எதிர்க்கட்சித் தலைவர் மோர்கன்டீஸ்வரன் கிராய் பிரதமராக கடந்த 11 ஆம் திகதியன்று பதவியேற்றார்.

சிம்பாப்வேயில் முறைகேடாக நடைபெற்ற தேர்தல்களின் மூலம் ஜனாதிபதி முகாபே தனது பதவியை தக்க வைத்துக்கொண்டதன் காரணமாக நாடாளுமன்றப் பெரும்பான்மையை பெற்றிருந்த எதிர்க்கட்சியினர் ஜனாதிபதி முகாபேயுடன் இணங்கிச் செல்ல மறுத்ததையடுத்தே இரண்டு தரப்பிற்கும் இடையே இழுபறி நிலை ஆரம்பமாகியது.

இதனைத் தொடர்ந்து ஜனாதிபதி முகாபேயையும், எதிர்க்கட்சித் தலைவர் மோர்கனையும் ஓர் இணக்கப்பாட்டிற்கு வருமாறு பல்வேறு அழுத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதையடுத்து ஜனாதிபதி முகாபே சில விடயங்களை விட்டுக்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டமையினால் இரண்டு பேருக்குமிடையே இணக்கப்பாடு ஏற்பட்டதாகவும் கருதப்படுகின்றது.



### அற்லஸ் கேள்வி - 192

**கேள்வி:** அமெரிக்க பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு எத்தனை டொலர் கடனுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது?

சரியான விடை........................................

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 192,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.

**போட்டி இல - 190 இன் சரியான விடை: ஒரு வருட காலம்**

**பரிசு பெறுவோர்**

காலித்,
லெப்பை வீதி, ஏறாவூர்-06.

எம்.உதயராஜினி,
நாவற்தோட்டம், சுன்னக்குடா,
மட்டக்களப்பு.

சின்னத்தம்பி பிரசன்னா,
பட்டித்திடல், மத்திய வீதி, தோப்பூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# இந்தோனேஷியாவிலிருந்து புதிதாய் இணைந்தவை












காடழிப்புகள், நீர் மாசுபடுதல் போன்ற பல்வேறு சூழல் மாசடைதலுக்கு ஏதுவான காரணிகளினால் நாளுக்கு நாள் ஒவ்வொரு இனத்தினைச் சேர்ந்த உயிரினங்கள் உலகிலிருந்து விடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவ்வாறான பிரச்சினைகளுக்கு மத்தியில் பல புதிய தாவர இனங்கள் மற்றும் உயிரினங்கள் இந்தோனேஷியாக் காடுகளிலிருந்து புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சூழல் விரும்பிகளுக்கு இந்த மகிழ்ச்சிகரமான செய்தியை இந்தோனேஷியாவிலிருந்து அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. இந்தோனேஷிய-நியூகினியா தீவில் உள்ள ஃபோஜா (Foja) என்ற மலைப்பாங்கான வனாந்தரப் பகுதியிலிருந்தே இந்த புதிய தாவர வகைகளையும் உயிரினங்களையும் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இவற்றில் தவளை இனங்கள் இரண்டும் புதிய கங்காரு இனமொன்றும் பறவையினங்கள் பலவும் அடங்கியுள்ளன.

அமெரிக்கா, இந்தோனேஷியா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள் உள்ளடங்கிய ஆய்வுக் குழுவொன்று ஃபோஜா வனாந்தரப் பகுதியில் ஒரு மாதகாலமாக ஆய்வுகளை மேற்கொண்டிருந்தது. கடல் மட்டத்திலிருந்து 2000 அடி உயரத்தில் அமைந்துள்ள இந்த வனாந்தரப் பகுதியில் மனித சஞ்சாரம் அற்ற பல இடங்கள் உள்ளன. இந்த வனாந்தரப் பகுதியினை சூழவுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களும் இந்த வனாந்தரப் பகுதிகளுக்குச் செல்வதில்லை என்றும் ஆய்வுக் குழுவின் பிரதான விஞ்ஞானிகளுள் ஒருவரான கலாநிதி.பீட்டில் தமது கண்டுபிடிப்புகளைப் பற்றி ஊடகங்களுக்குத் தெரிவித்தபோது கூறினார்.

**இந்தோனேஷிய-நியூகினியா தீவில் உள்ள ஃபோஜா (Foja) என்ற மலைப்பாங்கான வனாந்தரப் பகுதியிலிருந்தே இந்த புதிய தாவர வகைகளையும் உயிரினங்களையும் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்**

புதிய கண்டுபிடிப்புகள் குறித்தான மகிழ்வினை வெளிப்படுத்திய பீட்டில் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்; ''நாம் இந்தப் பகுதிக்கு ஹெலிகொப்டரில் சென்றிருந்தோம். 19 ஆம் நூற்றாண்டின் பின்னர் இவ்வாறான உயிரினங்கள், தாவரங்கள் இந்தோனேஷியாவில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கவில்லை. இது பற்றி மேலும் பல ஆய்வுகளை மேற்கொள்கின்றோம். எதிர்வரும் காலங்களில் பல உயிரின வகைகளைக் கண்டுபிடிக்க முடியும்'' என்று கூறியுள்ளார்.

இந்தக் கண்டுபிடிப்புகளில் தங்க நிறக் கழுத்துடைய மரக் கங்காரு இனம் (Golden neck tree Kangaroo) விலங்கினங்களில் புதிய வகைக் கங்காரு இனமாகும். Choerophyre எனப்படும் தவளை இனமும் Berlepsch's எனப்படும் பறவையும் இந்த ஆய்வின்போது கண்டுபிடிக்கப்பட்ட மேலும் பல புதிய விலங்குகளாகும். இவற்றில் தேன் குருவி இனம் மிகவும் குறிப்பிடத்தக்கது.

சுமார் 60 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தோனேஷியக் காடுகளில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட புதிய பறவையினம்தான் இந்த தேன்குருவி இனம் என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். எவ்வாறாயினும் தீவிரமாக சூழல் மாசடைதலுக்கு உட்பட்டிருப்பதனால் பல்வேறு உயிரினங்கள் உலகிலிருந்து விடைபெற்றுக் கொண்டிருக்கும் அதேவேளை, இந்தப் புதிய உயிரினங்களைப் பாதுகாப்பது நம்து கடமை என்று சூழலியலாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

## இந்தோனேஷியா வனப்பகுதிகள் அழிக்கப்பட்டமை

**பாம் ஒயில் விளைச்சலுக்காக பெரும் பகுதிகளிலுள்ள மழைக்காடுகள் அழிக்கப்பட வேண்டும் என்று முன்வைக்கப்பட்டுள்ள ஆலோசனைகள் சூழலியலாளர்களை ஆத்திரமடைய வைத்துள்ளது.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோன்றி தோன்றி மறைந்தவள் யார்?




பார்வையை விலக்கிவிட்டுப் பார்த்த விமல் அங்கே தனக்கு முன்னால் அந்தப் பெண் நின்று கொண்டு இருப்பதைக் கண்டு மிகுந்த அதிர்ச்சிக்குள்ளானான். இதற்கு முன்னர் இரண்டு மூன்று தடவை அவளைப் பார்த்திருந்தபடியால் இப்பொழுது அவன் அவ்வளவாக அலட்டிக் கொள்ளவில்லை. திடீர் திடீரென்று மறைந்து விடும் அவள் இன்று ஏனோ அவனையே பார்த்தபடி நின்று கொண்டிருந்தாள்.

ஆனால், அடுத்த கணம்....? யாரோ சுவிட்சை அழுத்த மின்விளக்கு அணைந்துவிட்டது. அறைக்குள் கும்மிருள் ஏற்பட்டது. இருளில் அவன் தன்னையும் அறியாமல் பயந்து அலறினான். ஆனாலும் சத்தம் வெளியில் வரவில்லை. தொண்டை அடைத்துக் கொண்டது. அதைத் தொடர்ந்து மீண்டும் மின்விளக்கு எரிந்தது. அறைக்குள் குபீரென வெளிச்சம் பரவியது.

ஆனால், அந்தப் பெண்...? அவளைக் காணவில்லை. முன்னர் போன்று இன்றும் அவள் மறைந்து விட்டாள் என்று அவன் நினைத்துக் கொண்டான். அதேநேரம் யாரோ கேலியாகச் சிரிக்கும் சத்தம் கேட்டது. சத்தம் வந்த பக்கம் நோக்கினான். அங்கே.....? அதாவது மின் சுவிட்சுக்கு அருகில்.... காவல்காரர் நின்று கொண்டு இருந்தார். சுவிட்சைப் போடுவதும் நிறுத்துவதுமாக அவர்தான் தன்னைப் பயமுறுத்தி இருக்கிறார் என்று அவன் புரிந்துகொண்டான்.

அவர் சிரித்தபடி கேட்டார், ''என்ன தம்பி, இன்றும் பயந்து விட்டீர்களா? ம்.... உங்களை திருத்தவே முடியாது'' அவன் பதில் எதுவும் பேசவில்லை. கேள்விக் குறியுடன் அவரை நோக்கினான்.



''என்ன தம்பி, புரியவில்லையா? நீங்கள்தானே ஆவியை சந்திக்க வேண்டும் என்று கூறினீர்கள். அதுதான் கூட்டிக்கொண்டு வந்தேன். ஆனால், நீங்கள்...?'' என்று அவர் ஏதோ சொல்லவும் அவன்....., ''ஆவியா? எங்கே?'' என்று கேட்டான்.

''சற்றுமுன் நீங்கள் பார்த்தீர்களே... அதுதான் ஆவி''

''அப்படியா? இப்பொழுது அவள் எங்கே?''

''ஆவி அவ்வளவு நேரத்துக்கு இருக்குமா? மறைந்துவிட்டது'' என்று கூறி சிரித்தார்.

என்னை வைத்து இவர் ஏதோ 'கொமெடி' பண்ணுகிறார் போலிருக்கிறது என்று அவன் உள்ளூர நினைத்துக் கொண்டான். பின்னர், ''உண்மையைச் சொல்லுங்கள் ஐயா'' என்று அவன் கெஞ்சுவது போல் கேட்டான்.

''தம்பி, உங்களுடைய பேய் பயத்தைப் போக்க வேண்டுமென்பதற்காகத்தான் ஆவி என்று பொய் சொன்னேன்'' என்று கூறியவர் கதவுப் பக்கம் பார்த்து ''இங்கே வாம்மா'' என்று அழைத்தார். கதவுக்கு அருகில் ஒளிந்து கொண்டு நின்ற அவள் சிரித்துக் கொண்டே அவன் முன்னால் வந்து நின்றாள். பின்னர்... ''என்ன அண்ணா, என்னை நீங்கள் மோகினிப்பேய் என்று நினைத்துப் பயந்து விட்டீர்களாமே.. காவல்கார அங்கிள்தான் சொன்னார்'' என்று சிரித்தபடி கேட்டாள்.

அவள் இப்படிக் கேட்டது அவனுக்கு மிகுந்த அவமானமாக இருந்தது. எனினும், அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் ''அது வந்து.... இரவு நேரத்தில் பூட்டி இருக்கும் தியேட்டருக்குள்....'' என்று அவன் இழுக்கும்போதே அவள் சொன்னாள்.

''என்ன அண்ணா, எங்கு பார்த்தாலும் ஓட்டை உடைசல் போல் இருக்கும் இந்த தியேட்டருக்குள் நுழைவது பெரிய வேலையா? கலரிக்குப் பக்கத்தில் நான் உள்ளே நுழைவதற்கு வசதியாக பலகை ஒன்றைக் கழற்றி 'அட்ஜெஸ்ட்' பண்ணி வைத்திருக்கிறேன்''

''அப்படியா? அப்போ உன் வீடு...?''

''தியேட்டர் வளவை ஒட்டியே இருக்கிறது. அன்றொரு நாள் நீங்கள் எங்கள் சாப்பாட்டுக் கடைக்கு வந்தீர்களாமே? காவல்கார அங்கிள்தான் சொன்னார்.

''ஆமாம்'' என்றவன் தன் மனதில் வேரூன்றிப் போய் இருந்த சந்தேகத்தை வெளியிட்டான்.

''உன் அப்பா உன் போட்டோவைக் காட்டி நீ தூக்குப் போட்டு தற்கொலை செய்து கொண்டதாகக் கூறினாரே''

விமல் இப்படிக் கேட்டதும் அவள் இலேசாகச் சிரித்துவிட்டு துயரம் நிறைந்த பார்வையோடு காவல்காரரைப் பார்த்தாள். அப்பொழுது காவல்காரர் சொன்னார், ''உண்மைதான் தம்பி. ஆனால், தூக்குப் போட்டுக்கொண்டு இறந்தது இவள் அல்ல..... இவளின் அக்கா''

''என்ன அக்காவா?'' வியப்புடன் கேட்டான் விமல்.

''ஆமாம்.. இருவரும் இரட்டைப் பிள்ளைகள். ஒரே அச்சில் வார்த்து எடுத்தது போல் இருப்பார்கள். இருவருமே சிறு வயதிலிருந்து இங்கு வந்து பழக்கப்பட்டு விட்டார்கள். இவர்களின் சாப்பாட்டுக் கடைக்கு நாங்கள் எந்தநேரம் போனாலும் இல்லையென்று சொல்லாமல் இவர்கள் அப்பா எங்களுக்கு சாப்பாடு தருவார். இரவில் முதலாளி வீட்டுக்குப் போன பின்பு இவர்கள் இருவரும் அநேக நாட்களில் வந்து படம் பார்ப்பார்கள். சில சமயங்களில் படம் முடிந்த பின்னரும் உட்கார்ந்தபடியே தூங்கி விடுவார்கள். இவளுடைய அக்கா இறந்த பின்னரும் அந்த ஞாபகத்துக்காக இவள் இங்கு வருவாள். இவளிடமுள்ள கெட்ட பழக்கம் வெற்றிலையைக் கண்டபடி மென்று தியேட்டருக்குள் துப்பி வைப்பதுதான்''

காவல்காரர் இப்படிக் கூறியதும் விமல் ஒருநாள் வெற்றிலையை யாரோ இப்படித் துப்பி வைத்து இருக்கிறார்களே என்று திட்டிக் கொண்டே கால்களை பாத்ரூமில் போய் கழுவியதையும் அவளுடைய பற்கள் கன்னங்கரேலென கறைப் பிடித்துப் போய் இருந்ததைப் பார்த்து பயந்ததையும் அவன் நினைத்துக் கொண்டான். பின்னர் கேட்டான், ''அது சரி நீ என்னைக் கண்ட போதெல்லாம் ஏன் ஓடி ஒளியவேண்டும்?''

''அது வந்து அண்ணா, முதல்நாள் நீங்கள் பெல்கனியில் உட்கார்ந்து தூங்கிக் கொண்டு இருந்தபோது இருட்டில் காவல்கார அங்கிள்தான் என்று நினைத்து உங்கள் முகத்துக்கு அருகில் வந்து கூர்ந்து பார்த்தேன். நீங்கள் விழித்து எழுந்து என் தலையில் மோதியபோதுதான் வேறு யாரோ என்று தெரிந்து பயந்து ஓடினேன். உங்களைக் கண்ட போதெல்லாம் பயந்து பயந்து ஓடினேன்''

விமலுக்கு இப்பொழுது எல்லாம் புரிந்தது. ஆனால், ஒருநாள் அதிகாலை மூன்று மணியளவில் அவன் களவாகப் படம் ஓட்டிப் பார்த்தபோது அவளும் வந்திருந்து படம் பார்த்தாளே. அது எப்படி என்று கேட்க வேண்டும் போல் இருந்தது. ஆனால், படம் ஓட்டிய விஷயம் தெரிந்து விடுமே என்று யோசித்துக் கொண்டு இருந்தான். ஆனால், காவல்காரராகவே சொன்னார்,

''என்ன தம்பி, அன்று நீங்கள் படம் போட்டுப் பார்த்த போது இவள் எப்படி வந்தாள் என்றுதானே யோசிக்கிறீர்கள்? அதுவந்து தம்பி... மாதவன் சில நாட்களில் 'ட்ரயல் ஷோ' போட்டுப் பார்ப்பார். அப்படிப்பட்ட நேரங்களில் இவள் படம் ஓடுவதை தெரிந்துகொண்டு முந்திக்கொண்டு வந்து படம் பார்ப்பாள். அன்றும் அப்படித்தான் மாதவன்தான் 'ட்ரயல் ஷோ' பார்க்கிறார் என்று நினைத்து வந்திருக்கிறாள். 'ட்ரயல் ஷோ' என்றால் என்னவென்று தெரியும்தானே?''

''ஆமாம்.. தெரியும். புதிய படம் போடும்போது முதல்நாள் போட்டுப் பார்ப்பது'' என்றவன் தான் களவாகப் படம் ஓட்டிய விஷயம் தெரிந்து விட்டதே என்று யோசித்தான்.

''பயப்படாதீர்கள் தம்பி. நீங்கள் படம் ஓட்டிப் பார்த்த விஷயத்தை நாங்கள் யாரிடமும் சொல்லமாட்டோம்'' என்று கூறிச் சிரித்தார்.

பின்னர் ''சரி தம்பி, இனியாவது பேய் பயமில்லாமல் இருப்பீர்களா அல்லது...'' என்று இழுக்கும்போதே விமல்.

''சேச்சே! இனிமேல் உண்மையான பேயே வந்தாலும் பயப்படமாட்டேன்'' என்று கூறினான். மூவரும் ஒருவரைப் பார்த்து ஒருவர் சிரித்துக் கொண்டனர்.

(முற்றும்)

# தந்தையின் ஆசி

முன்னொரு காலத்தில் ஒரு பிரபு வசித்து வந்தார். அவருக்கு மூன்று மகன்கள். மூவர் மீதும் அவர் மிகுந்த பாசம் வைத்திருந்தார். வயதாகி விட்டதால் தன் சொத்துக்களை அவர்களுக்குப் பிரித்துக் கொடுக்க நினைத்தார். அதற்கு முன் அவர்கள் மூவருக்கும் ஒரு சின்னப் பரீட்சை வைக்க விரும்பினார்.

மூவரையும் அழைத்து, ''பிள்ளைகளே..... நான் உங்கள் மூவரையும் ஒரு பறவையாக மாற்றப் போகிறேன் என்று வைத்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு என்ன பறவையாக மாற ஆசை?'' என்றார்.



''அப்பா எனக்குக் கழுகாக மாற ஆசை. அது தன்னுடைய பலத்தில் வாழ்கிறது. மிகவும் பலசாலியான பறவை. தனக்கு வேண்டியதைப் பிடித்துக் கொள்கிறது'' என்றான் மூத்த மகன்.

''அப்பா, நான் புறாவாக மாற ஆசைப்படுகிறேன். அது மிகவும் சாதுவான பறவை. அத்துடன் புறாக்கள் கூட்டம் கூட்டமாகக் கூடி ஒற்றுமையாக வாழ்வது என்பது எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது'' என்றான் இரண்டாமவன்.

''அப்பா எனக்கு அன்னப்பட்சியாக மாற ஆசை. அதன் கழுத்து நீளமாக இருப்பதால் மனதில் எது தோன்றினாலும் உடனே வாயில் வந்துவிடாது. நெஞ்சை விட்டுத் தாண்டிக் கழுத்துக்கு வர நேரமாகும். அதற்குள் தீர யோசிக்க நேரம் இருக்கிறது அல்லவா? அதனால், அன்னமாக மாற ஆசைப்படுகிறேன்'' என்றான்.

தந்தை யோசித்தார். மூத்த மகனைப் பார்த்து, ''மகனே! இங்கிலாந்தில் உள்ள சொத்துக்களுக்கு உன்னை அதிபதியாக நியமிக்கின்றேன். இங்கிலாந்தில் அடித்துப் பறித்து வாழ முடியாது. உனக்கு அப்படிப்பட்ட முரட்டு வாழ்க்கை பிடித்திருந்தாலும் சண்டை சச்சரவுகள் இல்லாத இங்கிலாந்தில் நீ இருப்பதுதான் நல்லது. அப்போதுதான் நீ முரட்டுத்தனமாக வாழ முடியாமல், அமைதியாக வாழக் கற்றுக்கொள்வாய்!'' என்றார்.

அடுத்து இரண்டாவது மகனைப் பார்த்து, ''மகனே! வேல்ஸ் நாட்டில் உள்ள ஆஸ்திகளுக்கு உன்னை அதிபதியாக்குகிறேன். காரணம், அங்கே சண்டை சச்சரவுகள் அதிகம். சண்டைக்கு வருபவர்களையும் சமாதானம் செய்து வைப்பாய். உன்னுடைய பொறுமை மற்றும் அன்பான குணத்தினால் கெட்டவர்களும் நல்லவர்களாக மாறுவர். அதனால்தான், அந்த சொத்துக்களை உனக்குக் கொடுக்கிறேன்'' என்றார்.

கடைசியாக மூன்றாவது மகனைப் பார்த்தார் தந்தை, ''மகனே! என்னிடம் இனிமேல் ஒன்றுமே இல்லை. இருந்த சொத்துக்கள் அனைத்தையும் உன் அண்ணன்களுக்குக் கொடுத்துவிட்டேன். உனக்கு நான் ஒன்றுமே கொடுக்கப் போவதில்லை. என்னுடைய ஆசிர்வாதம் ஒன்றே உனக்குப் போதும். நீ உன் அறிவைக் கொண்டே பெரிய பதவிக்கு வருவாய்'' என்று வாழ்த்தினார்.

மூன்றாவது மகனுக்கு சற்று வருத்தமாக இருந்தாலும், ''அப்பாவின் ஆசீர்வாதம் ஒன்றே போதும்! அது நிச்சயமாகப் பலிக்கும்'' என்று நம்பினான். அவர் சொன்னபடியே மூன்றாவது மகன் பிற்காலத்தில் இங்கிலாந்து நாட்டிற்கே பிரதம நீதிபதியாக விளங்கினான். அந்தக் காலத்தில் பிரதம நீதிபதி பதவி அரசனுக்கு அடுத்தபடியான பதவியாக இருந்தது. பெற்றோரின் ஆசீர்வாதத்திற்கான பலனைப் பார்த்தீர்களா? எனவே, பெற்றோரை மதித்து வாழவேண்டும். அப்போது உயர்ந்த பதவியை அடையலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச கிரிக்கெட் சபைக்கு 100 வருடங்கள் பூர்த்தி



**கிரிக்கெட் போட்டியானது இன்று உலக நாடுகள் பலவற்றில் பலரதும் அபிமானத்தை வென்ற ஒரு போட்டியாக அமைந்துள்ளது.**

**இத்தகைய சிறப்பு வாய்ந்த கிரிக்கெட் போட்டிகளை நடத்துகின்ற, கட்டுப்படுத்துகின்ற அதிகாரத்தைப் பெற்ற அமைப்புத்தான் சர்வதேச கிரிக்கெட் சபையாகும். (ICC-International Cricket Council)**

**மேற்படி, கிரிக்கெட் சபை இந்த வருடம் தனது நூறாவது பிறந்தநாளை கொண்டாடுகின்றமை கிரிக்கெட் ரசிகர்களுக்கு நல்லதோர் தகவலாகவே அமையும். 1909 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட சர்வதேச கிரிக்கெட் சபை நூறாவது வருடத்தைக் கொண்டாடுகின்றமையின் அடையாளமாக புதிய இணையத்தளமொன்றையும் அறிமுகப்படுத்தியுள்ளதுடன், நூறாவது வருட பூர்த்தி விழாவை வெகுவிமரிசையாக கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.**

International Cricket Council

## வரலாறு

சர்வதேச கிரிக்கெட் சபையின் முதலாவது மாநாடு 1909 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15 ஆம் திகதியே நடைபெற்றது. இந்த மாநாடு லண்டனின் லோட்ஸ் மைதான அரங்கில் நடைபெற்றமையும் குறிப்பிடத்தக்கது. தென் ஆபிரிக்காவைச் சேர்ந்த தனவந்தரான அபிபேலி என்பவரே மிகுந்த ஆர்வத்துடன் இதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தார். உலகிலேயே டெஸ்ட் போட்டிகள் முதன்முதலாக ஆரம்பமாகியது 1877 ஆம் ஆண்டாக இருந்தபோதிலும் 1909 ஆம் ஆண்டை அடைகையில் இப்போட்டிகளில் கலந்து கொண்ட இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, தென் ஆபிரிக்கா நாடுகளின் கிரிக்கெட் அதிகாரிகளின் இணக்கப்பாட்டுடன் நடைபெறும் போட்டிகளாகவே அவை நடைபெற்று வந்தன.

அதற்கமைய இந்த நாடுகளுக்கிடையே முக்கோண (மும்முனை) போட்டிகளை நடத்துவதற்கு தனவந்தரான பேலிக்கு மிகுந்த ஆர்வம் ஏற்பட்டிருந்தது. கிரிக்கெட் போட்டிகளுக்கென சர்வதேச மட்டத்தில் அமைப்பொன்று ஏற்படுத்தப்படுவதன் ஆரம்பம் என்றும் அதனை இனங்காட்டலாம்.

ஆரம்பத்தில் இந்த கிரிக்கெட் அமைப்பில் பொதுநலவாய நாடுகளைச் சேர்ந்த நாடுகள் மாத்திரமே இடம்பெற்றிருந்தன. 1926 ஆம் ஆண்டில் இந்தியா, நியூஸிலாந்து, மேற்கிந்திய தீவுகள் ஆகியனவும் நிரந்தர உறுப்பு நாடுகளாக சேர்க்கப்பட்டன. தொடர்ந்து 1953 ஆம் ஆண்டில் பாகிஸ்தானும் இந்த அமைப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. இதில் ஆரம்ப கால உறுப்பு நாடாக இருந்த தென் ஆபிரிக்கா, தனது சொந்த நாட்டில் நிறவேற்றுமை காட்டி மக்களை ஒடுக்குகின்றது என்ற குற்றச்சாட்டின்பேரில் அந்த நாட்டின் உறுப்புரிமை நீக்கப்பட்டது. பின்னர் மீண்டும் 1991 ஆம் ஆண்டு தென் ஆபிரிக்கா மேற்படி அமைப்பில் சேர்த்துக்கொள்ளப்பட்டது.

நாளடைவில் ஏனைய நாடுகளுக்கும் இந்த அமைப்பில் அங்கத்துவம் வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கில் அதிலுள்ள சில சட்டதிட்டங்கள் திருத்தி அமைக்கப்பட்டன. அதற்கமைய அந்த அமைப்பானது 1965 ஆம் ஆண்டில் 'சர்வதேச கிரிக்கெட் சம்மேளனம்' என்று பெயரிடப்பட்டது.

எனவே, 1981 இல் இலங்கையும், 1992 இல் சிம்பாப்வேயும், 2000 இல் பங்களாதேஷும் சர்வதேச கிரிக்கெட் சம்மேளனத்தில் நிரந்தர உறுப்பு நாடுகளாக சேர்க்கப்பட்டன. 1989 ஆம் ஆண்டில் இந்த சம்மேளனத்தில் மேலும் சில புதிய சட்டதிட்டங்கள் புகுத்தப்பட்டதையடுத்து அதன் பிரதான நிறைவேற்று அதிகாரியாக டேவிட் ரிச்சர்ட்ஸ் என்பவர் நியமிக்கப்பட்டார். தொடர்ந்து கிரிக்கெட் சம்மேளனத்தின் தலைமையகமாக லோட்ஸ் அரங்கில் அலுவலகமொன்று ஏற்படுத்தப்பட்டு பணிகள் முன்னேடுக்கப்பட்டன.

1997 ஆம் ஆண்டில் சர்வதேச கிரிக்கெட் சபையின் அபிவிருத்தி வேலைத்திட்டம் செயற்படத் தொடங்கியது. அதேவேளை, அதில் 104 நாடுகள் இணையக்கூடியவாறு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. 2005 இல் முதல் தடவையாக மகளிர் கிரிக்கெட் துறையையும் சர்வதேச கிரிக்கெட் சபை தனது பொறுப்பில் எடுத்துக் கொண்டது. இதன் பின்னர் சர்வதேச கிரிக்கெட் சபையின் புதிய தலைமையகம் ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தின் 'டுபாய்'யில் நிறுவப்பட்டது.



## நிரந்தர உறுப்பு நாடுகள்

உலகில் 104 நாடுகள் சர்வதேச கிரிக்கெட் சபையில் அங்கம் வகிக்கின்றன. இதில் 10 நாடுகள் மாத்திரமே நிரந்தர உறுப்புரிமை பெற்ற நாடுளாகத் திகழ்கின்றன. இந்தப் பத்து நாடுகளே தற்போது டெஸ்ட் போட்டிகளில் ஈடுபட்டு வருகின்ற நாடுகளாகும். இந்த நாடுகள் தத்தமது நாடுகளில் கிரிக்கெட் சபையொன்றை நிறுவியுள்ளன. அவ்வவ் கிரிக்கெட் சபைகளே சர்வதேச கிரிக்கெட் சபையுடனான தொடர்புகளைக் கையாள்கின்றன. **இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, தென் ஆபிரிக்கா, இந்தியா, நியூஸிலாந்து, மேற்கிந்திய தீவுகள், பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ், சிம்பாப்வே** ஆகியனவே அந்த பத்து நாடுகளுமாகும்.

## இணை உறுப்புரிமை நாடுகள்

மேலும் 34 நாடுகள் இணை உறுப்புரிமை நாடுகளாகவும் இதில் அங்கம் வகிக்கின்றன. இந்த நாடுகளுக்கு டெஸ்ட் அந்தஸ்து வழங்கப்பட்டிராத போதிலும் வாய்ப்பு வழங்கப்படும் சந்தர்ப்பங்களில் சர்வதேச ஒருநாள் போட்டிகளில் கலந்து கொள்வதற்கான ஏது நிலைகள் உள்ளன. அந்த நாடுகள் வருமாறு :- ஆர்ஜன்டீனா, பெல்ஜியம், பேர்மியுடா,பொட்ஸ்வானா, கேமன் தீவுகள், கெனடா, டென்மார்க், ஜேர்மனி, ஃபிஜி தீவுகள், பிரான்ஸ், ஜிப்ரோல்ட்டா, குஅர்ன்ஸே, ஹொங்கொங், அயர்லாந்து, இஸ்ரேல்,இத்தாலி,ஜப்பான், நியூஜேர்ஸி, கென்யா, குவைத்,மலேசியா,நமீபியா, நெதர்லாந்து, நேபாளம், நைஜீரியா, பபுவா நியூகினியா,ஸ்கொட்லாந்து, சிங்கப்பூர், டென்ஸேனியா, தாய்லாந்து, ஐக்கிய அரபு இராச்சியம், உகண்டா, அமெரிக்கா, ஸெம்பியா.

இந்த நாடுகளுள் பேர்மியூடா, கெனடா, அயர்லாந்து, கென்யா, நமீபியா, நெதர்லாந்து, ஸ்கொட்லாந்து, ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகள் உலகக் கிண்ணப் போட்டிகளில் கலந்து கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## ஒட்டு உறுப்புரிமை நாடுகள்

மேலும் 60 நாடுகள் சர்வதேச கிரிக்கெட் சபையில் ஒட்டு உறுப்புரிமை நாடுகளாக அங்கம் வகிக்கின்றன. உயர்மட்ட அளவில் இந்த நாடுகளில் கிரிக்கெட் போட்டிகள் அமையாத போதிலும் சர்வதேச கிரிக்கெட் சபையின் சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பட்டே இந் நாடுகளில் கிரிக்கெட் போட்டிகள் நடைபெறுகின்றன.

(மேலும் சில விபரங்கள் அடுத்த இதழில்....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுதம் ஏந்தும் தாவரங்கள்

**தாவரங்களின் பகுதிகள் அனைத்தும் விலங்குகளின் உணவாகின்றன. விலங்குகள் அனைத்தும் தாவரங்கள் உற்பத்தி செய்யும் உணவுகள் மீது நேரடியாகவும் மறைமுகமாகவும் தங்கியுள்ளன. இதனால், தாவரங்களின் வளர்ச்சிக்கும் இருப்புக்கும் இனப்பெருக்கத்திற்கும் விலங்குகளால் அச்சுறுத்தல் ஏற்படுவது சகஜமான விடயமாகவுள்ளது.**

சில தாவரங்கள் இந்த அச்சுறுத்தலுக்கு எதிர்ப்பினை வெளிக்காட்டுகின்றன. தாவர உண்ணிகள் தம்மை உட்கொள்வதனைத் தடுப்பதற்காக பல்வேறு உபாயங்களை இந்த தாவரங்கள் மேற்கொள்கின்றன. இவ்வாறான தாவரங்களை ஆயுதம் ஏந்தும் தாவரங்களாக நாம் இனங்காட்டுவதில் தவறில்லை என்றே கூறவேண்டும். குத்தினால் வேதனை தரும் முட்கள், விலங்குகளுக்கு மரணத்தை ஏற்படுத்தக்கூடிய விஷத்தன்மை என்பனவற்றினை சிற்சில தாவரங்கள் இயல்பாகவே கொண்டிருக்கின்றன. இவையனைத்தும் தம்மை உட்கொள்வதனைத் தடுக்க தாவரங்கள் கையாளும் உத்திகள் என்று கூறலாம்.



## முட்கள்





நாகதாளி போன்ற சில தாவரங்களில் இவ்வாறு முட்கள் இருப்பதைக் காணலாம். வறண்ட பிரதேசங்களில் வளரும் இத்தகைய தாவரங்களில் தண்டுகளைச் சூழ ஈரலிப்புத் தன்மை காணப்படும். இத்தாவரம் முழுவதும் முட்கள் பரந்திருக்கும். இந்த முட்கள் தாவரங்களிலுள்ள ஈரலிப்புத் தன்மை ஆவியாகி வெளியேறுவதைத் தடுக்கின்றது. விலங்குகள் இந்த தாவரப் பகுதிகளை உட்கொள்வதனைத் தடுக்கும் முகமாகவே இந்த முட்கள் அமைந்துள்ளன. வறண்ட காலநிலையில் ஆவியாதலைத் தடுத்து வாழும் இத்தாவரங்கள் அதிலுள்ள முட்களினூடாக தம்மை ஏனைய விலங்குகளிடமிருந்து பாதுகாத்துக் கொள்கின்றன.

## உருவகத் தோற்றம்

அமெரிக்க மழைக்காடுகளில் இருக்கும் கொடித்தோடை வகையைச் சேர்ந்த Passion Flower எனும் தாவரத்தின் பகுதிகளில் உள்ள ஒருவகை நச்சுத்தன்மை காரணமாக விலங்குகள் இந்த தாவரத்தினை உட்கொள்வதில்லை.



வண்ணத்திப் பூச்சிகள் மற்றும் வேறு வகை பூச்சியினங்கள் இத்தாவரத்தின் பூக்கள், இலைகளில் முட்டைகளை இடுவதனைத் தவிர்ப்பதற்காக இத்தாவர இனம் ஓர் உபாயத்தினைக் கடைப்பிடிக்கின்றது. இத்தாவரம் அதன் முக்கிய பகுதிகளில் முட்டைகள் போன்ற போலி முட்டைகளை உருவாக்கி விடுகின்றன. பெண் வண்ணத்திப் பூச்சிகளை ஏமாற்ற மேற்படி உத்தியை இத்தாவரங்கள் கையாள்கின்றன. இவ்வாறான போலி முட்டைகளை உருவாக்குவதன் மூலம் தாவரத்திற்கு ஏற்படும் பாதிப்பினைக் குறைத்துக் கொள்கின்றது இந்த Passion Flower தாவரம்.

## நச்சுத் தாவரங்கள் சில....

### Fox Glove



**இது கடும் நச்சுத் தன்மை கொண்ட தாவரமாகும். எனினும் எமக்கு ஏற்படும் இருதய நோய்க்கான மருந்தினைத் தயாரிக்க இந்தத் தாவரமே பயன்படுத்தப்படுகின்றது. இந்த மருந்து இத்தாவரத்தின் தண்டுப்பகுதியிலிருந்தே பெறப்படுகின்றது.**

### Poisonous ivy



**கொடியாக வளரக் கூடிய இத்தாவரம் தோலில் ஸ்பரிசிக்கப் பட்டவுடன் தோலில் எரிகாயமும் வேதனை தரும் கொப்புளங்களும் ஏற்படக்கூடும்.**

### Dumb Cane



**இந்தத் தாவரத்தின் சாறு தொண்டையிலும் உதட்டிலும் வீக்கத்தன்மையினை ஏற்படுத்தும்.**

### Caster oil



**இத்தாவரத்தின் விதைகளில் நச்சுத் தன்மை காணப்படுகின்றது. இதில் சிறிய ளவு உடலுக்குள் சென்றாலும் மனிதர்களுக்கு மரணம் சம்பவிக்கும்.**

### Deadly Night Shade



**இத்தாவரத்தின் வேர்களில் 'எட்ரோபைன்' எனும் கொடிய நச்சு ரசாயனம் அடங்கியுள்ளது.**

## முனைகள்





இன்னும் சில தாவரங்களின் இலைகளில் சொரசொரப்பான கொம்பு போன்ற முனைகள் காணப்படுகின்றன. இந்த இலைகள் உடலில் ஸ்பரிசிக்கப்படும் பொழுது அதிலுள்ள முனைகள் 'ஹிஸ்டமின்' எனும் ரசாயனப் பதார்த்தத்தை சுரந்து அது உடலில் படிந்து வேதனையை அளிக்கும். இதனால், இயற்கையிலேயே விலங்குகள் இத்தாவரங்களை உட்கொள்வதனை தவிர்த்துக் கொள்ளப் பழக்கப்பட்டுள்ளன.

## பசை வகை



சில தாவரங்கள் ஒட்டும் தன்மையான பசையினை தாவர உட்பகுதியில் சேமித்து வைத்திருக்கும். இந்த பசைத்தன்மை தாவரத்தின் உட்பகுதியில் உருவாகின்றது. பூச்சி வகைகளினால் தாவரத்தின் மகரந்தப் பகுதிகளுக்கு பாதிப்பு ஏற்படும் பொழுது இந்த ஒட்டும் தன்மை கொண்ட பசை பூச்சிகளின் கால்களில் ஒட்டி விடுகின்றது. இதனால், அந்தப் பூச்சிகள் பறக்க முடியாது ஸ்தம்பிதமடைந்து விடுகின்றன. அவற்றினால் மேலும் தாவரத்திற்கு சேதங்களை ஏற்படுத்த முடியாத வகையில் பூச்சிகள் தடுக்கப்படுகின்றன. Horse Chestnut என்ற தாவரம் இதற்கு சிறந்த உதாரணமாகும்.

## ரசாயனச் செயற்பாடு



'எக்கேசியா' தாவரம் ஆபிரிக்க 'சவன்னா' காடுகளில் வளர்கின்றது. தாவர உண்ணியொன்று இந்தத் தாவரத்தினை உட்கொள்ள முனையும்போது இத்தாவரத்திலிருந்து துர்நாற்றம் வீசத் தொடங்கும். இது 'எதலீன்' அடங்கிய திரவமாகும். 'எக்கேசியா' தாவரத்தினை நோக்கி ஏதாவதொரு விலங்கு வரும்பொழுது ஏற்படும் துலங்களினால் இந்த ரசாயனம் உற்பத்தியாக தொடங்குகின்றது. இந்த துர்நாற்றத்தினால் தாவர உண்ணிகள் இந்தத் தாவரத்தினை உட்கொள்வதில்லை. இதனால், தாவரத்திற்கு உரிய பாதுகாப்பு கிடைக்கின்றது.

## எறும்புகளினால் பாதுகாப்புப் பெறல்



சில வகை 'எக்கேசியா' தாவரங்கள் எறும்புகளினால் பாதுகாப்புப் பெறுகின்றன. இந்த தாவரங்களில் உள்ள கூர்மையான முட்பகுதிகளின் முனையில் இருக்கும் இடைவெளியில் எறும்புகள் வசித்து வருகின்றன. வேறு பூச்சி இனங்கள் மற்றும் தாவர உண்ணிகள் இத்தாவரத்தின் பகுதிகளை உட்கொள்ளத் தயாராகும் பொழுது எறும்புகள் வெளியே வந்து, அவற்றினை தாக்கத் தொடங்குகின்றன. இவ்வாறு வேறு ஓர் உயிரினத்தின் உதவியுடன் தமது பாதுகாப்பினை ஏற்படுத்திக் கொள்ள 'எக்கேசியா' தாவரத்தினால் இயலுமாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 194 - பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

| போட்டி: 01 | போட்டி: 02 | போட்டி: 03 | போட்டி: 04 | போட்டி: 05 (குறு.போ-205) |
|---|---|---|---|---|
| நௌபர் நௌபீல், தரம் - 2, அல்-அஸ்கர் ம.வித்., உப்புக்குளம். | க.பவித்ரா, தரம் - $9^{C}$, பாக்கியம் தே.கல்., மாத்தளை. | சோ.வினோச்குமார், தரம் - $7^{A}$, ஸ்ரீ கோரக்கர் த.ம.வித்., சம்மாந்துறை. | எம்.ஜே.ஏ.பாசித், தரம் - $8^{C}$, அல்-பலாஹ் ம.வித்., போருதோட்டை. | எஸ்.எம்.ஏ.பஸ்லத், தரம் - $10^{BG}$, அல்-மினா மு.ம.வித்., மாத்தறை. |

## ஆறு வித்தியாசங்களில் X அடையாளமிடுங்கள் 2





## (A) தமிழ்ச்சொல்லை எழுதுக 4

1. carpenter - ....................
2. highway - ....................
3. bog - ....................
4. rout - ....................
5. usual - ....................

## (B) எதிர்க்கருத்துச் சொல்லில் கோடிடுக

1. இன்சொல் - துன்சொல்/வன்சொல்/ஒத்தசொல்.
2. ஐயம் - தெளிவு/பயம்/ஐது.
3. வளர்ச்சி - மலர்ச்சி/தளர்ச்சி/குளிர்ச்சி.
4. பாமரர் - தேவர்/ஆடவர்/பண்டிதர்.
5. ஞானம் - அஞ்ஞானம்/மெஞ்ஞானம்/மானம்.





தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2009.03.04 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அற்லஸ் அறிவுக்கு விருந்து 197
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு


## கணக்குப் புதிர் 3

1 முதல் 9 வரையுள்ள எண்களில் ஒவ்வொரு எண்ணையும் இரட்டையாகப் பயன்படுத்தி, ஒன்பது எண்களை உருவாக்க வேண்டும். அவற்றில் ஏதாவது ஓர் எண்ணைக் கொண்டு மற்றைய எண்களை வகுத்தால், மீதி வரக்கூடாது. ஒன்பது எண்களினதும் கூட்டுத்தொகையாக வரும் மூன்றிலக்க எண்ணிலுள்ள ஓர் எண், மற்றைய இரு எண்களையும் கூட்டினால் வரக்கூடிய எண்ணாகும். உங்களுக்குத் தெரிந்தால் இந்தப் புதிருக்கான விடையை எழுதி அனுப்புங்கள்.

## 1 வழி காட்டுங்கள்



## அறிவுக்கு விருந்து - 194 விடைகள்

**போட்டி - 03**

| (A) | (B) |
|---|---|
| 1-4 | 1-சமையலறை |
| 2-1 | 2-சம்பளம் |
| 3-3 | 3-திறமை |
| 4-5 | 4-தாரகை |
| 5-2 | 5-யுத்தம் |

**போட்டி - 04**

| | |
|---|---|
| அ) 346 | - CCCXLVI |
| ஆ) 1252 | - MCCLII |
| இ) 87 | - LXXXVII |
| ஈ) 769 | - DCCLXIX |
| உ) 935 | - CMXXXV |
| ஊ) 2745 | - MMDCCXLV |
| எ) 818 | - DCCCXVIII |
| ஏ) 45 | - XLV |

## போட்டிகளில் பங்குபற்றுவோருக்கு ஓர் அன்பான வேண்டுகோள்!

நீங்கள் அறிவுக்கு விருந்து போட்டிகளில் கலந்து கொண்டு பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகளாக விரும்புகிறீர்களா? அப்படியாயின், போட்டிகளுக்கான விடைகளை எழுதி அனுப்பும்போது **உங்கள் பெயர், வீட்டு முகவரி, கற்கும் பாடசாலை, தரம், பாடசாலை முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம்** என்பனவற்றை தெளிவாக எழுதி, விடைகளை **தபாலட்டையில்** மாத்திரம் இணைத்து எமக்கு அனுப்பி வையுங்கள். அத்துடன், மேற்குறிப்பிட்ட விபரங்களை எழுதி அனுப்புபவர்கள் மாத்திரமே பரிசுக் குலுக்களில் இணைத்துக் கொள்ளப்படுவதோடு, உங்களுக்குரிய பரிசுகளை காலதாமதமின்றி உரிய முறையில் அனுப்பி வைக்க இது வசதியாக இருக்கும் என்பதையும் கவனத்தில் கொள்ளுங்கள்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல.208 5



### மேலிருந்து கீழ்

01. உத்தமன் என்பதன் எதிர்ப்பாற்சொல்.
02. பாராட்டத்தக்க அல்லது ஒருவருக்கு பயனளிக்கக்கூடிய ஒரு செயல்/சாதனைக்கு அன்பளிப்பாக வழங்கப்படுவதைக் குறிப்பது.
03. பறவை-ஒத்தகருத்துச் சொல்.
05. தலையில் அணியப்படுவது.
06. மாலை-எதிர்க்கருத்துச் சொல்.
07. 'பசித்த பின்.......' என்பது பழமொழி.

### இடமிருந்து வலம்

01. ஓர் எழுத்து அல்லது சொல்லின் ஒலிப்பு முறை.
04. சுய கௌரவம் என்றும் அர்த்தப்படும்.
06. தாவரத்தில் இலை/பூ/காயைத் தாங்கியிருப்பது.
08. காற்றின் இயக்கத்தால் நீர்ப்பரப்பிலிருந்து கரை நோக்கி வரும் நீருக்கு வழங்கும் சொல்.
09. இதனுள் முத்து விளையும்.

### குறுக்கெழுத்துப்போட்டி 205 விடைகள்

**மேலிருந்து கீழ்**

01. இஸ்ரேல்
02. மந்தை
03. தீவு
04. வேட்பாளர்
07. கிரி

**இடமிருந்து வலம்**

01. இருமல்
04. வேவு
05. ரேந்தை
06. தபால்
07. கிளி
08. ஏரி
09. போர்வை

குறுக்கெழுத்துப் போட்டி -208
"விஜய்"
த.பெ.எண். 2037
கொழும்பு

### பாராட்டுப் பெறுவோர்

ப. ஜினித்தா, தரம் - 8, தமிழ் வித்., பள்ளகெடுவ.

எம்.ஆர்.ரஷீதா, தரம் - 11, அல்-மின்ஹாஜ் தே.பாட., ஹபுகஸ்தலாவை.

கணேசன் துலக்சன், தரம் - $8^{D}$, தமிழ் ம.ம.வித்., வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஒல்லாந்தரின் இலங்கை வருகை

இந்து மகா சமுத்திரத்தில் இருந்து தூர கிழக்கு நாடுகளுக்குச் செல்வதற்கான வாசல் போல் இருந்தது மலாக்கா எனும் நகரம். இந்த மலாக்கா கேந்திர முக்கியத்துவம் மிக்க வர்த்தக மையமாகத் திகழ்ந்தது. அதேபோல் போர்த்துக்கேயரின் முக்கிய கோட்டையாகவும் விளங்கியது.

கி.பி 1641 இல் ஒல்லாந்தர் மலாக்காவைக் கைப்பற்றினர். அதன்பின் எவ்வித பிரச்சினையும் இல்லாமல் அவர்கள் இந்து சமுத்திரப் பகுதிக்குள் நுழைந்தனர். அது மாத்திரமல்ல இந்தியாவிலும் இலங்கையிலும் இருந்த போர்த்துக்கேயக் கோட்டைகளை இங்கிருந்து தாக்குவதற்கும் அவர்களுக்கு வசதியாக இருந்தது.

கி.பி 1602 ஆம் ஆண்டே ஒல்லாந்தர் முதன்முதலாக இலங்கைக்கு வந்ததாக கருதப்படுகின்றது. அப்பொழுது தூதுக்குழு ஒன்றே இலங்கைக்கு விஜயம் செய்தது. அக்காலகட்டத்தில் மலையக இராச்சியத்தின் அரசனாக முதலாம் விமலதர்மசூரியனே வீற்றிருந்தான். அவன் அவர்களிடத்தில் (ஒல்லாந்தரிடத்தில்) போர் உதவிகளைக் கேட்டான். ஆனால், அவ் உதவிகளைச் செய்ய தூதுக்குழுவோ பின்வாங்கியது.

அதன்பின் கி.பி 1638 ஆம் ஆண்டில் அட்மிரல் வெஸ்ட்டர்வோல்ட் என்பவர் மட்டக்களப்பைத் தாக்கினார். பின் அதனைக் கைப்பற்றினார். இரண்டாம் இராஜசிங்க மன்னனுடன் ஒப்பந்தமொன்றை ஏற்படுத்திக் கையொப்பமிட்டனர். போர்த்துக்கேயரை இலங்கையிலிருந்து துரத்துவதற்கு மன்னன் ஆதரவளிக்க வேண்டுமென்பதே அதன் நோக்கமாகும். அதற்காக ஒல்லாந்தருக்கு ஆகும் சகல செலவுகளையும் பொறுப்பேற்பதுடன் துறைமுகம் மற்றும் வர்த்தகத்தின் ஏகபோக உரிமைகளை ஒல்லாந்தருக்கு வழங்க மன்னன் உடன்பட்டான். எனினும், அந்த ஒப்பந்தத்தில் இடம்பெற்ற குறிப்பிட்ட ஒரு வரி இரு பகுதியினரிடையேயும் முரண்பாடுகளை தோற்றுவித்தது.

"ஒல்லாந்தருக்கு போர்த்துக்கேயரின் கோட்டைகளில் அரசனின் விருப்பத்துடனேயே தங்கமுடியும்" என்ற சர்சைக்குரிய அந்த வரிகள் அரச பிரதிநிதிகள் ஒப்பந்தத்தில் எழுதப்பட்டிருந்தது. அது ஒல்லாந்தின் பிரதியில் எழுதப்படவில்லை. அதனாலேயே முரண்பாடுகள் தோன்றின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 60 மில்லியன் வருட பழைமையான பாம்பின் எச்சம் கண்டெடுப்பு



முற்காலத்தில் வாழ்ந்ததாகக் கருதப்படக்கூடிய இராட்சதப் பாம்பொன்றின் உடல் எச்சங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதையடுத்து அகழ்வாராய்ச்சியாளர்கள் மிகுந்த ஆச்சரியத்திற்கு உள்ளாகியுள்ளனர். ஒரு பஸ்ஸையொத்த நீளத்தையும் பாரிய எடையையும் கொண்டதாக கருதப்படுகின்ற இந்தப் பாம்பானது முதலைகளையே தனது உணவாக உட்கொண்டு வந்துள்ளதாக கருதப்படுகின்றது.

அகழ்வாராய்ச்சியாளர்கள் எதிர்பாராத ஒரு நிகழ்வாகவே இந்தப் பாம்பின் எச்சத்தைக் கண்டெடுத்துள்ளனர். இது எவ்வாறு நிகழ்ந்ததென்றால், கொலம்பியாவின் 'சொரஜோன்' என்ற நிலக்கரி சுரங்கப் பகுதியொன்றில் சுரங்கத் தொழிலாளர்கள், சுரங்கம் தோண்டலில் ஈடுபட்டிருந்தபோது சில எலும்புப் பகுதிகளை அவர்கள் கண்டுள்ளனர். இந்த விடயத்தை அவர்கள் அகழ்வாராய்ச்சியாளர்களுக்கு அறிவித்தனர். உடனே அவ்விடத்திற்கு வந்த அகழ்வாராய்ச்சியாளர்கள் தீவிரமாக தமது ஆராய்ச்சிப்பணியில் இறங்கினர். அந்த எலும்பின் எச்சங்களை கொண்டு அது ஒரு பாம்பின் எச்சம் என்பதை உறுதி செய்தனர்.

**'எனகொண்டா' பாம்பையும்விட பல மடங்கு பாரிய இராட்சதப் பாம்பாம் இது!**

'சொரஜோன்' என்ற பகுதியிலுள்ள நிலக்கரிச் சுரங்கத்தில் இது கண்டெடுக்கப்பட்டமையால் அதற்கு 'டைட்டனோபோவா சொரஜோனெஸிஸ்' என்றும் பெயர் வைத்தனர். மலைப்பாம்பை ஒத்ததாக இது இருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகின்றனர்.



கொலம்பியாவில் இற்றைக்கு 60 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் ஈரலிப்பான பாரிய சதுப்பு நிலப்பரப்புக்கள் காணப்பட்டுள்ளன. இதனை அண்டிய பகுதிகள் பாரிய காடுகளாக இருந்துள்ளன. அதற்கமைய தற்போது அகழ்வாராய்ச்சியாளர்கள் கண்டெடுத்துள்ள இந்த பாம்பின் எச்சங்களைக் கொண்டு பார்க்கையில் இந்தப் பாம்பானது குறித்த காலப்பகுவத்தில் அந்தக் காட்டுப் பகுதியில் வசித்திருக்கலாம் என்று கருத வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

மேலும், இந்தப் பாம்பானது 1.25 தொன் எடையையும் 13 மீற்றர் நீளத்தையும் கொண்டது என்றும் அறியப்பட்டுள்ளது. திரைப்படங்களில் வருகின்ற 'எனகொண்டா' பாம்பையும் விட இது பெரியது என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

பாம்புகளைப் பற்றி கற்பனைக் கதைகள் ஒருபுறமும் நிஜத்தகவல்கள் மறுபுறமும் என்று மக்களை ஆச்சரியப்பட வைத்து வருகின்ற இன்றைய காலகட்டத்தில் இவ்வாறு இராட்சதப் பாம்பு பற்றிய தகவல்கள் வெளியாகியுள்ளமை பல மடங்கு ஆச்சரியத்தை தோற்றுவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. காலப்போக்கில் மேற்படி பாம்பைப் பற்றிய மேலும் பல புதிய தகவல்களை அறியலாம் என்றும் ஆராய்ச்சியாளர்கள் எதிர்பார்ப்பை மேலும் தூண்டியுள்ளனர்

**King of the snakes**

At one time, the prehistoric *Titanoboa* snake was probably the largest non-marine creature living on Earth.




Source: Journal of Nature

BRADY MACDONALD Los Angeles Times




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2009, பெப்ரவரி மாதம் 25ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday February 25, 2009.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org